பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | கார்த்திகை 13 | புதன்கிழமை 29.11.2017 | கதிர் 24

## இலங்கையிலிருந்து கடத்தப்பட்ட 16 கிலோ தங்கம்

இலங்கையிலிருந்து கடத்தி வரப்பட்டதாகக் கூறப்படும் 16 கிலோ தங்கப் பாளங்களுடன் தமிழ்நாடு, தோண்டி பஸ் நிலையப் பகுதியில் வைத்து இருவர் கைது செய்யப்பட்டனர் என அறிவிக்கப்படுகின்றது.

'கியூ'பிரிவுபொலிஸாரினாலும்,

பக்கம் 18

## * அரைகுறைத் தீர்வைத் திணித்து....
## * விலை போய் விடுவர் என்ற.....

# எம் தலைவர்கள் மீதான அவநம்பிக்கையே நினைவேந்தல் பேரெழுச்சிக்குக் காரணம்



## முதல்வர் விக்னேஸ்வரனின் கணிப்பீடு இது அரசுக்குத் தமிழர் தலையடி என்கிறார்

யாழ்ப்பாணம், நவ.29

"எங்கே எமது தலைவர்கள் விலை போய்விடுவார்களோ, அரைகுறைத் தீர்வைத்தம் மீது திணித்து விடுவார்களோ என்று எண்ணி அஞ்சி விடுதலை வீரர்களின் நினைவேந்தல்களில் மன நிறைவுகான எமது மக்கள் எத் தனித்துள்ளனர். கொள்கைகளில் உறுதியாக இருந்தவர்களின் நினைவில் அமைதி காண எத்தனித்துள்ளனர்."

பக்கம் 18

## எய்ட்ஸ் விழிப்புணர்வு நடைபவனி யாழ்.நகரில்

### இன்று காலை நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 29


சர்வதேச எய்ட்ஸ் நோய் தடுப்புத் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இன்றுவிழிப்புணர்வுநடைபவனி இடம்பெறவுள்ளது.

இந்த நடைபவனி யாழ். போதனா வைத்தியசாலை முன் பாக இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பக்கம் 18

## அரச பஸ் சேவைகள் வடக்கில் முடங்கின

### மாணவர், பொதுமக்கள் பாதிப்பு



யாழ்ப்பாணம், நவ.29

இலங்கைப்போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் உபாலி கிரிவத்துட்டுவ மற்றும் பாதுகாப்பு அதிகாரி வி.சுரேந்தர் ஆகியோரை உடனடியாக இடமாற்றக் கோரிவடபிராந்தியபோக்குவரத்துச்சபையின்தொழிற் சங்கம்நேற்றுப்பணிப்புறக்

பக்கம் 18

## ஹெரோயினுடன் யாழில் இருவர் கைது



யாழ்ப்பாணம்,நவ. 29

ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்ட இருவர் யாழ். பஸ் நிலையத்துக்கு

பக்கம் 18

## கைது அச்சத்தில் கோட்டா! தடுக்கக் கோரி நேற்று மனு



### மேன்முறையீட்டு மன்றில் தாக்கல்

கொழும்பு, நவ. 29

தன்னைக் கைது செய்வதற்கான முயற்சிகளைத் தடுத்து நிறுத்தும் உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் பாதுகாப்புச் செயலாளர்கோட்டாபயராஜபக்ஷ மேன்முறை

பக்கம் 18

## ஈழ அகதிகள் 9 பேர் படகில் இலங்கைக்குத் தப்பினராம்

யாழ்ப்பாணம், நவ. 29

தமிழகம் தூத்துக்குடி ஈழ அகதிகள் முகாமைச் சேர்ந்த 9 பேர் இராமேஸ்வரத்தில் இருந்து படகு மூலம் இலங்கைக்குத் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தமிழக ஊடகமான தினமணிசெய்திவெளியிட்டுள்ளது.

"இதுகுறித்துதமிழகஉளவுத்துறை அதிகாரிகள் விசாரணையில் ஈடுபட்டுள்

பக்கம் 18

## சாவகச்சேரி நகர சபைக்கு ஈ.பி.டி.பி. கட்டுப்பணம்




யாழ்ப்பாணம், நவ. 29

உள்ளூராட்சித் தேர்தலுக்காகச்சாவகச்சேரிநகர சபையில் போட்டியிடும் பொருட்டு ஈழ மக்கள் ஜன

பக்கம் 18

## யாழ். பஸ் நிலையத்தில் நேற்றுக் காலை குழப்பம்

### தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு



யாழ்ப்பாணம், நவ. 29

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின்தொழிற் சங்க நடவடிக்கையை மீறிப்பருத்தித்துறைடிப்போ

பக்கம் 18

## பிரபாகரனின் படங்கள் வைத்து 'கேக்' வெட்டியவர்கள் கைதாவர்

### பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் ஊடாக விசாரணை என்கிறார் அமைச்சர் றுவான்



கொழும்பு, நவ. 29

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனின் ஒளிப்படங்களை வைத்து அவரது பிறந்த தினம் கொண்டாடியவர்கள், மாவீரர் நாள் அனுஷ்டித்தவர்கள் விரைவில் கைதுசெய்யப்படுவர்.

– இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்கஅமைச்சர்றுவான்விஜேவர்த்தன தெரிவித்தார்.

கம்பஹாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில்

பக்கம் 18

# வவுனியா சிறுமி துஷ்பிரயோகத்தைக் கண்டித்து நேற்று அமைதி ஊர்வலமும் மகஜர் கையளிப்பும்!








வவுனியா, நவ. 29

வவுனியா, கணேசபுரம் பகுதியில் 15 வயது சிறுமி ஒருவர் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதைக் கண்டித்தும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கக் கோரியும் அமைதி ஊர்வலம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

அத்துடன், வவுனியா அரச அதிபர் சோமரத்ன விதான பத்திரனவிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

மகளிர் அபிவிருத்தி நிலையம் மற்றும் பெண்கள் அமைப்புக்கள் இணைந்து இந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தன.

வவுனியா பொலிஸ் நிலையம் முன்பாக நேற்று காலை 10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட அமைதி ஊர்வலம் ஏ9 வீதி வழியாகச் சென்று மாவட்ட செயலகத்தில் முடிவடைந்தது.

இதன்போது மாவட்ட அரசாங்க அதிபரிடம் குறித்த சிறுமி வன்புணர்வுக்கு எதிராக துரிதமாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கக் கோரியும் மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்த ஊர்வலத்தில் மகளிர் அபிவிருத்தி வள நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவசந்திரன், வடமாகாண பெண்கள் அமைப்பின் இணைப்பாளர் ந.கீதாஞ்சலி மற்றும் பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்த பலரும் கலந்துகொண்டனர். (க-100)

## முஸ்லிம் அமைச்சர்கள் இருவர் மஹிந்த ராஜபக்ஷவுடன் சந்திப்பு!

அரசின் பிரபல முஸ்லிம் அமைச்சர்கள் இருவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர் என அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த இரு அமைச்சர்களில் ஒருவர் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர் என்பதுடன் முஸ்லிம் அரசியல் கட்சி ஒன்றைப் பிரதி நிதித்துவப்படுத்துகிறவர் எனவும் மற்றைய அமைச்சர் அரசின் ஓர் இராஜாங்க அமைச்சராகச் செயற்படுபவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சர்கள் தாம் வகிக்கும் அமைச்சுப்பதவி களில் இருந்து விலகி எதிர்க் கட்சியில் ஆசனம்பெறுவது தொடர்பிலும், எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் தொடர்பிலும் முன்னாள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளனர் என்றும் அரசியல் தகவல்வட்டாரங்கள்தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மீனவ தினத்தை முன்னிட்டு மன்னாரில் மாபெரும் பேரணி!

உலக மீனவ தினத்தை முன்னிட்டு சமூக பொருளாதார மற்றும் கலாசார உரிமைகளை அடிப்படை மனித உரிமையாகப் புதிய அரசமைப்பில் உறுதிப்படுத்துவோம் எனும் தொனிப் பொருளில் மாபெரும் பேரணி ஒன்று இடம் பெற்றுள்ளது.

மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வழி நடத்தலில் நேற்றையதினம் அந்த பேரணி முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட செயலகத்துக்கு அருகில் இருந்து காலை 9 மணியளவில் பேரணியாக ஆரம்பமாகி தலை மன்னார் வீதி ஊடாக நகர சபை மண்டபத்தை வந்தடைந்த நிலையில் மீனவ தின நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்த உலக மீனவ தின நிகழ்வில் 14 மாவட்டங்களை சேர்ந்த மீனவ மற்றும் விவசாய மக்கள் கலந்து கொண்டனர். வட மாகாண சபை கமநல, விவசாய மற்றும் மீன் பிடி அமைச்சர் க.சிவனேசன் உட்படப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## பொலித்தீன் தொழிற்சாலைகளில் சோதனை நடத்துவதற்கு நடவடிக்கை!

பொலித்தீன் தொழிற்சாலைகளில் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

பொலித்தீன் உற்பத்திகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் வழிகாட்டல்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில் இதன் போது கவனம் செலுத்தப்பட உள்ளது என மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவரான பேராசிரியர் லால் தர்மசிறி தெரிவித்துள்ளார்.

மேலும், 500 பொலித்தீன் உற்பத்தியாளர்கள் தம்மைப் பதிவு செய்து கொள்ளாமல் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் எனவும், அவர்களை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கீழ் பதிவு செய்து கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## வயலின் இசைக் கலைஞர் மறைவு!



இசையுலகின் பெரும் பாலானோரின் உள்ளத்தைக் கவர்ந்த பிரபல முன்னோடியானவயலின் வித்தவான் ருவான் வீரசேகர நேற்றுக் காலமானார்.

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்த இவர் அதற்கான சிகிச்சையை பெற்றுவந்த நிலையிலேயே காலமானார்.

## அனுமதியின்றிய ஊடகச் சந்திப்பை ஐ.தே.கட்சி எம்.பிக்கள் நடத்தத் தடை!

கொழும்பு, நவ. 29

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் அனுமதியின்றி, ஊடகவியலாளர் சந்திப்புகளை நடத்துவதற்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பிக்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கட்சியின், நாடாளுமன்ற குழுக்கூட்டத்திலேயே மேற்படி அறிவுறுத்தல்களை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளாரெனத் தகவல் தெரிவிக்கின்றது.

## அனைத்து மாவட்டங்களிலும் கட்டுப்பணம் செலுத்தும் மஹிந்த அணி !

கொழும்பு நவ. 29

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அனைத்து மாவட்டங்களிலும் கட்டுப்பணம் செலுத்த பொதுஜன பெரமுன கட்சி தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் தேர்தலில் போட்டியிடுவதற்காக முதலாவதாகக் கட்டுப்பணம் செலுத்திய அரசியல் கட்சியாக பொது ஜன பெரமுன பதிவாகியுள்ளது.

இந்தக் கட்சியின் சார்பில் நேற்றைய தினம் கம்பஹா, களுத்துறை மற்றும் காலி மாவட்டங்களில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கானகட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் சகிதம் கட்டுப் பணம் செலுத்துவதற்காக அந்தந்த மாவட்டத்தில் உள்ள சுதந்திரக் கட்சியின் மாவட்ட, மாகாண மட்ட அரசியல் வாதிகள் மற்றும் முக்கியஸ்தர்களும் கூடச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன கட்சி என்பன இணைந்துபோட்டியிடுவது குறித்த பேச்சுகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# பாடசாலை மாணவர் அடையாளத்தை உறுதிப்படுத்த புதிய நடைமுறைத் திட்டம்

## கைரேகைப் பதிவேடு, கியூ.ஆர்.குறியீட்டுடன்

அரசாங்க பாடசாலைகளில் உள்வாங்கப்படும் அனைத்து மாணவர்களினதும் அடையாளத்தை உரிய முறையில் உறுதி செய்யவும், பரீட்சை நடவடிக்கையின் போது, பரீட்சார்த்திகள் சார்ந்த விடயங்களை அதிகாரிகள் இலகுவாக அறிந்து கொள்வதற்கும், புதிய நடைமுறையொன்று முன்மொழியப்பட்டுள்ளது.

பரீட்சைகள்திணைக்களத்தின் நடவடிக்கைகளைமேலும்விரிவுபடுத்துவதற்கான ஆலோசனைகளை முன்வைக்க, புத்திஜீவிகளை கொண்ட குழுவொன்றை கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் நியமித்திருந்தார்.

இந்தக் குழுவினராலேயே, மேற்படி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, பாடசாலைகளுக்குள் உள்வாங்கப்படும் அனைத்து மாணவர்களுக்கும் அவர்களின் அடையாளத்தை உறுதி செய்யும் இலக்க மொன்றை (Unique Student Code) அறிமுகப்படுத்தவும், கைவிரல் (Finger Print) அடையாளத்தின் மூலம் ஆள் அடையாளத்தை உறுதி செய்து அதனூடாககியூ ஆர்(QR)குறியீடு ஒன்றை தயாரிப்பதற்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த இலக்கம் பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளப்படும் முக்கிய பரீட்சைகளின் போது, பயன்படுத்துவதற்கும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே,முக்கியபரீட்சைகளான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, கல்விப்பொதுத்தராதரசாதாரண தரப் பரீட்சை, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை ஆகியவற்றின்போது,மாணவர்களின் செயற்திறன், ஆற்றல்களை கண்காணிக்கவும், நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என அரசாங்கத்தகவல்திணைக்களச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

இதேபோன்று பரீட்சைகளின் போது நடைபெறும் மோசடிகளைத் தடுக்கவும் இது பெரும் பயனுள்ளதாக அமையும் என்றும் கூறப்படுகின்றது.

### அண்ணன், தங்கை சடலகள் மீட்பு

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்டகவரவிலதோட்டத்தில் பாக்றோ பிரிவில் காணாமல் போயிருந்த இருவரின் சடலங்களும்கடற்படைசுழியோடிகளின் உதவியை கொண்டு நேற்று மதியம் 2 மணியளவில் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறுமீட்கப்பட்டசடலங்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன்,தங்கைஎனவும்ஒரு தாயின் வயிற்றில் பிறந்த இரண்டு தந்தையர்களின் பிள்ளைகளான சுப்பிரமணியம் மகேந்திரன் (வயது 28), பரமேஸ்வரன் மகாலெட்சுமி (வயது 19) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

(முன்னர் வந்த விவரமான செய்தி 8 ஆம் பக்கத்தில்)

# ஸ்ரீ ராமநாத கானாமிர்தம் இசைவேள்வி வருட இறுதியில்

யாழ்ப்பாணம், நவ.29

அகில இலங்கைக் கம்பன் கழகம்தனதுகொழும்புக்கிளைக் கழகத்தினூடாக 'ஸ்ரீ ராமநாம கானாமிர்தம்' எனும் பெயரிலான இசைவேள்வியினை வருடந்தோறும் நடத்தி வருகிறது.

இந்இசைவேள்வியில் நம் நாட்டு இசைக்கலைஞர்களோடு புகழ் பெற்ற தமிழ்நாட்டு இசைக் கலைஞர்கள் பலரும் வருடந்தோறும் கலந்து சிறப்பித்து வருகின்றனர். சென்னையில் மார்கழி மாதத்தில் நடத்தப்படும் இசைவிழாக்களுக்கு நிகராக இவ்விழா நடைபெற்று ஈழத்து இசைரசிகர்களைதிருப்திசெய்து வருகிறது.

இப்புகழ்பெற்ற விழாக்களின் வரிசையில் 2017 ஆம் ஆண்டுக்கான இசைவிழாவினை இவ்வாண்டு டிசம்பர் மாதம் 30 ஆம், 31 ஆம் திகதிகளிலும், 2018 ஜனவரி முதலாம், 2 ஆம் திகதிகளிலும் நடாத்துவதென கம்பன்கழகம் முடிவுசெய்துள்ளது. இவ்விழா நிகழ்வுகளில் நம்நாட்டின் பிரபல இசைக் கலைஞர்களும், தமிழ்நாட்டின் பிரபல இசைக்கலைஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். தினமும் மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை இவ்விழா நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. கட்டணமின்றி நடைபெறும் இவ்விழா நிகழ்ச்சிகளில்கலந்துபயனடையுமாறு இசைரசிகர்கள்அனைவரையும் கம்பன்கழகம் வேண்டிநிற்கிறது.

இந்நிகழ்வுகள் பற்றிய மேலதிக விபரங்களை அறிய விரும்புவோர் 0772935509, 0112360525 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

# இராணுவ ஆயுதங்களுடன் கொள்ளையில் ஈடுபட்டவருக்கு ஆயுள்காலச் சிறைத் தண்டனை

யாழ்ப்பாணம், நவ.29

இராணுவத்திற்குசொந்தமான ரி - 56 ரக துப்பாக்கியை பயன்படுத்தி கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட நபருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரனால் ஆயுள் கால சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப் பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருபவை வருமாறு:--

வவுனியா - மதவுவைத்த குளத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவர் 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி இலங்கை இராணுவப் படைக்குச் சொந்தமான ரி - 56 வகையைச் சேர்ந்த துப்பாக்கி ஒன்றையும், 15 துப்பாக்கி ரவைகளையும், 4 துப்பாக்கி குண்டுக் கவசங்களையும் களவாடி பின்னர் அவற்றைப் பயன்படுத்தி வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் பல்வேறு குற்றச்செயல்களைச்செய்தமை தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில்2010ஆம்ஆண்டு காலப்பகுதியில் பல முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா பொலிஸார் அந் நபரை கைது செய்தனர். அவர்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது அந்த நபர் வவுனியா - பட்டக்காடு குளப்பகுதியில் பல்வேறு குற்றச் செயல்களுக்குபயன்படுத்தியவைஎனக் கருதப்பட்ட துப்பாக்கிமற்றும்துப்பாக்கி ரவைகளை மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரிய வந்திருந்தது. இதனையடுத்து அவைகடந்த2010ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி வவுனியா பொலிஸாரால் மீட்கப்பட் டன.

விசாரணையின்முடிவில் இராணுவத்திற்குசொந்தமானரி-56 ரகத் துப்பாக்கியை வைத்திருந்த குற்றச்சாட் டுக்கு ஆயுள் கால சிறைத் தண்டனையும், இரண்டாவது குற்றச்சாட்டான துப்பாக்கி ரவைகளைஉடைமையில்வைத்திருந்தமைக்குஒருவருடகடூழிய சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது.

மேலும்,இந்தநபர்2009ஆம் ஆண்டு வவுனியா நாகர் இலுப்பைக்குளம்பகுதியில்வீடுபுகுந்து ஆயுத முனையில் தங்க நகைகளைக்கொள்ளையடித்தகுற்றத்திற்காக 10 வருடத்திற்கு ஒத்தி வைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத்தண்டனையும் -

2010 ஆம் ஆண்டு கனேசபுரம் பகுதியில் வீடு புகுந்து ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியானபணம்மற்றும்பொருள்களை கொள்ளையடித்த குற்றத்திற்காக25வருடகடூழிய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (உ -100)

# சு.கவுக்கு மஹிந்த தரப்பு கடும் நிபந்தனை விதிப்பு

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில்இணைந்து போட்டியிட வேண்டுமென்றால் அரசாங்கத்திலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி விலகவேண்டுமென கூட்டு எதிரணி கடும் நிபந்தனை விதித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரி ஆதரவு அணியினருக்கும்மஹிந்தராஜபக்ஷ தலைமையிலானகூட்டுஎதிரணியினருக்கும் இடையே நேற்று நடைபெற்ற முக்கிய பேச்சுக்களின்போதே இந்த நிபந்தனை முன் வைக்கப்பட்டுள்ளது.

தங்களின் ஆதரவு வேண்டுமென்றால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சியினர்வரவு- செலவுத்திட்டத்தை தோற்கடித்து தங்களது நேர்மைத் தன்மையை நிரூபித்துக் காட்டவேண்டும் என மஹிந்த அணியினரால் அந்த சந்திப்பின் போது கூறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பேச்சுகளில் சுதந்திரக் கட்சியின் சார்பாகஅமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, அநுரபிரிய தர்சன யாப்பா மற்றும் பிரதி அமைச்சர் லசந்த அழகிய வண்ண ஆகியோரும் கூட்டு எதிரணி சார்பான குழுவில் சி.பி. ரட்னாயக்க எம்.பி., மஹிந்த யாப்பா அபேவர்த்தன எம்.பி., பவித்ராவன்னி யாராச்சி எம்.பி. ஆகியோரும் கலந்து கொண்டிருந்ததாக கூறப்படுகின்றது.

### வவுனியாவில் திடீரென எரிந்த மோட்டார் சைக்கிள்



வவுனியா – வேப்பங்குளம் 6 ஆம் ஒழுங்கை பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று முன்தினம் இரவு 8.50 மணியளவில் திடீரென தீப்பற்றி எரிந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

மோட்டார்சைக்கிளில் உரிமையாளர் அங்கு அதனை நிறுத்து விட்டுகடைக்குச்சென்றுள்ளார்.

கடையில் இருந்து திரும்பிய சமயத்தில் மோட்டார் சைக்கிள் திடீரெனதீப்பற்றிஎரிந்துள்ளது. உடனடியாகஅயலவரின்உதவியுடன்தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததுடன், நெளுக்குளம் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# தவறுதலாக சக சிப்பாயைச் சுட்டுக் கொன்ற சிப்பாய்க்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை

யாழ்ப்பாணம்–பருத்தித்துறையில் சக இராணுவச் சிப்பாயை சுட்டுக்கொலைசெய்தவர்எனக் கூறப்படும் சிப்பாய்க்கு ஐந்து ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு கடூழியச் சிறைத் தண்டனைவிதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 28ஆம் திகதி பருத்தித்துறையில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கவனயீனமான முறையில்துப்பாக்கிப்பிரயோகம்மேற்கொண்டு சக இராணுவச் சிப்பாயை மரணமடையச் செய்த சம்பவம்தொடர்பில்சட்டமா அதிபரால் யாழ்ப்பாணமேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணையின் போது எதிரியான இராணுவச் சிப்பாய் தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்கிறார் எனத் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் இந்த இராணுவச்சிப்பாய்நீண்ட காலமாக சேவையாற்றினார் எனவும், தவறுதலாக துப்பாக்கி வெடித்ததன் காரணமாகவேசக இராணுவச்சிப்பாய் உயிரிழந்திருந்தார் எனவும், வேண்டுமென்றே திட்டமிட்டு இது செய்யப்படவில்லை என்றும் அவர் சார்பு சட்டத்தரணி மன்றில் கருணை விண்ணப்பம் செய்திருந்தார்.

அவற்றைப் பரிசீலனை செய்த நீதிபதி, கவனயீனமான முறையில் தவறுதலாக மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினாலேயே அந்தச் சிப்பாய்உயிரிழந்துள்ளார்என்ற அடிப்படையில், மேற்படி இராணுவச்சிப்பாய்குஐந்துஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு கடூழியச் சிறைத் தண்டனையை விதித்தார்.

அத்துடன், 2 ஆயிரம் ரூபா அபராதம்விதித்ததுடன்,அதனை செலுத்தத் தவறின் 1 மாத கால கடூழியச்சிறைத்தண்டனையும் அனுபவிக்க நேரிடும் எனவும் உத்தரவிட்டார்.

# வட்டு. - அராலி மத்தியில் நாளை மர நடுகை விழா

## ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தினர் ஏற்பாடு

வட்டுக்கோட்டை – அராலி மத்தி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தினர் வருடா வருடம் சிறப்பாகநடத்திவரும்'எம்தேசம் காக்க மர நடுவோம்' வேலைத் திட்டத்தின் கீழ் –

இம்முறையும் மரம் நடுகை விழாநாளைவியாழன்பிற்பகல் 2 மணிக்கு, முன்பள்ளி வளாகத்தில் நிலையத்தின் தலைவர் ச.மோகனதாசன்தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில்முன்பள்ளிவளாகத்தில் நிழல் தரும் மரங்கள் நடப்படுவதுடன், பயனாளிகளுக்கு பயன்தரு மரக்கன்றுகளும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் விசேட நிதி ஒதுக்கீடான 15 லட்சம்ரூபாநிதியில்கட்டப்படவுள்ள படிப்பகத் திற்கான அடிக்கல் நடும்வைபவமும்இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஈ.சரவணபவன் எம்.பி. கலந்துகொள்வார்.

சிறப்புவிருந்தினர்களாகபிரதேச கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் முருகமூர்த்தி வித்தியாசாலை அதிபர் ஆகியோர் கலந்துகொள்வதோடுபொதுமக்களையும் கலந்துகொள்ளுமாறு சனசமூக நிலையத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். இ

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தாக்குப் பிடிக்குமா புதிய அரசமைப்பு முயற்சிகள்?

**இலங்கைத் தமிழர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை எடுத்து வரும் அயராத முயற்சி, இப்போது இலவு காத்த கிளி கதையாக முடிந்து விடுமோ என்று சந்தேகத்தைக் கிளப்பும் திசையை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகப்படுகின்றது.**

**'வெண்ணெய் திரண்டு வரும் நேரம் தாளி உடைந்த கதையாகி விடுமோ' இந்தத் தீர்வு முயற்சி எத்தனங்கள் என்ற ஐயம் இப்போது யாவருக்கும் எழத் தொடங்கிவிட்டது என்பது உண்மையே.**

**தென்னிலங்கைச் சிங்களத்தின் இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து, நல்லாட்சி அரசு அமைத்ததின் விளைவாகவே, இனப்பிரச்சினைத் தீர்வுக்குமான விடயங்களை உள்ளடக்கிய புதிய அரசமைப்பைக் கொண்டுவர முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.**

**ஆனால், அந்த முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன. இப்போதுதான் புதிய அரசமைப்புக்கான எத்தனம் அதன் முதற் கட்டத்தைத் தாண்டியிருக்கின்றது.**

**புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வழிகாட்டல் குழு தனது இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கின்றது. அதனை நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாக மாறி பரிசீலனைக்கு எடுத்து விவாதித்து வருகின்றது.**

**இன்னமும் அரசமைப்பு நகல் வடிவம் தயாராகவில்லை. அதற்கு இடையில் 'கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போனது போல' அரசமைப்பு முயற்சி தவறிப்போகுமா என்ற நிலைமை உருவாகிவிட்டது.**

**தென்னிலங்கைச் சிங்களத் தலைமை இன்று மூன்று தரப்புகளாகப் பிரிந்து நிற்கின்றது. ஒரு புறம், பிரதமர் ரணில் தலைமையில் ஐ.தே.கட்சி. மறுபுறம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் சுதந்திரக் கட்சி. மூன்றாவதாக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூட்டு எதிரணி. இவையே தெற்கின் பிரதான அரசியல் சக்திகள்.**

**தற்போதைய நிலையில் நல்லாட்சி அரசு தொடர்ந்தால் மட்டுமே புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியும் தொடரும் என்பது தெளிவு.**

**ஆனால், தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமை நல்லாட்சி அரசின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்கியுள்ளது.**

**பிரதமர் தலைமையிலான ஐ.தே.கட்சியும் ஜனாதிபதி தலைமையிலான சுதந்திரக் கட்சியும் கூட்டு அரசு ஒன்றை அமைப்பதற்கான உடன்பாட்டை செய்து, அதனை நீடித்துள்ள நிலையில், அந்த உடன்பாடு இந்த டிசெம்பர் மாதத்துடன் முடிவடைகின்றது. டிசெம்பர் வரும்போது உடன்பாட்டைப் புதுப்பிப்பது குறித்துத் தீர்மானிக்கலாம் என்று அவ்வப்போது கூறப்பட்டுவந்தது.**

**ஆனால், தென்னிலங்கையில் ஆளும் தரப்புப் பிரமுகர்களுக்கு இடையில் உருவாகிவரும் கருத்து வேற்றுமைகள், முரண்பாடுகள், பகைமை எதிர்ப்புணர்வுகள், அரசியல் போட்டிகள் என்பன இந்த கூட்டு டிசெம்பர் மாதம் வரை கூடத் தாக்குப்பிடிக்குமோ என்ற ஐயுறவு நிலையை ஏற்படுத்தி நிற்கின்றன.**

**நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நல்லாட்சி அரசின் தற்போதைய வரவு - செலவுத் திட்டத்தின் மீது எதிர்வரும் 9ஆம் திகதி இறுதி வாக்கெடுப்பு நடக்கவிருக்கின்றது.**

**வரவு - செலவுத் திட்டத்தின் மீதான இறுதி வாக்கெடுப்பில் கடந்த வருடமும், மாகாணசபைகள் தேர்தல் திருத்தச் சட்டத்தின் மீது அண்மையிலும் நாடாளுமன்றத்தில் தனக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு இருந்தமையை நல்லாட்சி அரசு நிரூபித்து வந்தது.**

**இது, புதிய அரசமைப்பு முயற்சியின்போது நல்லாட்சி அரசுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு உண்டு என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தத் தவறவில்லை.**

**புதிய அரசமைப்பை ஏற்படுத்துவதற்கு சர்வஜன வாக்கெடுப்பில் மக்களின் பெரும்பான்மை ஆதரவே அவசியமானது, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு அவசியமானதல்ல என்றாலும் -**

**தென்னிலங்கை அரசியல் களேபரம் போகின்ற போக்கு, நல்லாட்சி அரசின் எதிர்காலம் குறித்து சந்தேகத்தையே கிளப்பி நிற்கின்றது. எதிர்வரும் 9ஆம் திகதி வரவு - செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பின்போது அதன் மோசமான பிரதிபலிப்பு எதிரொலிக்கும் என அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.**

**ஐ.தே.க. - சு.க. - கூட்டு எதிரணி என்ற முத்தரப்பு அரசியல் குழாம்களுக்கு இடையில் அணி மாற்றங்கள் ஏற்படக் கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன. முத்தரப்புகளுக்கும் இடையிலான நம்பிக்கைகள், அவநம்பிக்கைகள் பற்றிய அளவீடுகளில் மாற்றம் நிகழ்ந்து வருகின்றமையை இத்தரப்புகளிலிருந்து பிரதிபலிக்கப்படும் கருத்துகள் புலப்படுத்துகின்றன.**

**திடீர் அணி மாற்றங்கள் நிகழ்ந்தால், நல்லாட்சி அரசு கவிழ்வதும், புதிய அரசமைப்பு முயற்சிகள் கிடப்புக்குள் தூக்கிக் கடாசப்படுவதும் தவிர்க்க முடியாததாகி விடும்.**

**அதுதான் இப்போது அச்சம் தரும் அரசியல் யதார்த்தமாகும்.**

# அரச அலுவலகங்கள் பக்கச் சார்பாக நடந்தால் அதைத் தட்டிக் கேட்பது அரசியல்வாதிகளின் கடமை!

## பாராட்டு விழாவில் முதலமைச்சர் விக்னேஸ்வரன்



யாழ்ப்பாணம், நவ. 29

அலுவலர்கள் பணியாற்றும் போது அசமந்தப் போக்கு அவர்களிடத்தில் அடையாளம் காணப்பட்டால் அதனைத் தட்டிக் கேட்பதும், பக்கச் சார்பாக அலுவலர்கள் நடக்கத் தலைப்பட்டால் அதனைச் சுட்டிக்காட்டி அதற்கான உரிய நடவடிக்கை எடுப்பதும் அரசியல்வாதிகளின் கடமையாக இருக்கவேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபைக்கு ஏழு தங்க விருதுகள் கிடைத்தமை தொடர்பிலான பாராட்டு விழா நேற்று முதலமைச்சர் அலுவலகக் கருத்தரங்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தப் பாராட்டு விழா உங்கள் ஒவ்வொருவருக்கும் உரியது.உங்களுக்கு என்று கூறும் போது உங்கள் பதவிகளில் உங்களுக்கு முன் இருந்தவர்களையும் குறிப்பிடு கின்றேன். நீங்கள் ஒவ்வொருவரும் கடமை உணர்ச்சியுடன் வேலை செய்தமையால்தான் இந்த விருதுகளை எமது மாகாணம் பெறக் கூடியதாக இருந்தது.

நாடாளுமன்ற சபாநாயகரையும் அதன் செயலாளர் நாயகத்தையும் அண்மையில் கொழும்பில் சந்தித்தேன். அப்போது இந்த விருதுகள் பற்றியும் பேசப்பட்டன. காரியாலய நடவடிக்கைகளில் அரசியல் ரீதியான உள்ளீட்டல்கள் தெற்கில் அதிகம் என்றும், வடக்கில் அவ்வாறல்ல என்றும் கூறப்பட்டது. அதாவது, அலுவலர்களைச் சட்டப்படி தமது காரியங்களைப் பக்கச் சார்பின்றி ஒழுங்காகச் செய்ய விட்டால் அவர்களின் அந்த அமைச்சு அல்லது திணைக்களம் செயலாற்றுகையில் சிறந்த நிலையை அடைய முடியும் என்று அடையாளம் காணப்பட்டது. அலுவலர்கள் பணியாற்றும் போது அசமந்தப் போக்கு அடையாளம் காணப்பட்டால், அதனைத் தட்டிக் கேட்பதும் பக்கச் சார்பாக அலுவலர்கள் நடக்கத் தலைப்பட்டால் அதனைச் சுட்டிக் காட்டி அதற்கான உரிய நடவடிக்கை எடுப்பதும் கொள்கைகளை வெளிப்படுத்துவதுதான் அரசியல்வாதிகளின் கடமையாக இருக்கவேண்டும் என்பது அங்கு சொல்லாமல் சொல்லப்பட்டது.

எம்மை வினைத்திறன் அற்றவர்கள் என்று இதுகாறும் விமர்சித்தவர்கள், சென்ற கால நியதிகளை வைத்து விமர்சித்தவர்களே. அதாவது ஓர் அரசியல்வாதி என்றால் தனக்குத் தேவையானவற்றைத் தட்டிப் பறித்து அலுவலர்களைக் கொண்டு நடைமுறைப்படுத்துபவர் என்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு செய்யாதவன் வினைத்திறன் அற்றவன் எனப்பட்டது.

முன்னைய ராஜபக்ஷ அரசு மற்றும் முன்னைய இராணுவ ஆளுநர் இருக்கும்போது அலுவலர்களுக்கு சுதந்திரம் இருக்கவில்லை. தாம் அடையாளம் காட்டுவனவற்றையே அலுவலர்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றிருந்தது. அதுவும் இராணுவப் பின்னணி கொண்ட ஆளுநர் ஆணையிட்டே தனது அலுவல்களை ஆற்றிக் கொண்டார். தனக்குச் சாதகமாக நடப்பவர்களைத் தட்டிக்கொடுத்தார். மற்றவர்களைத் தண்ணீர் இல்லாக் காட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்தார். இதைப் பார்த்த அலுவலர்களும் அதிகாரிகளுக்கு அடிபணிந்து சேவையாற்றத் தலைப்பட்டனர்.

அதுமட்டுமல்ல, அதிகாரிகளுக்கு சலாம் போட்டு தமக்குத் தேவையான வற்றையும் சட்ட முறைமைக்கு அப்பால் சென்று சாதித்து வந்தனர். ஒருவிடயத்தைச் செய்ய சட்டம் இடம் கொடுக்கின்றதா என்பதைப் பாராது, தான் தோன்றித்தனமாக நடவடிக்கை எடுக்க இது வழிவகுத்தது. இதைத்தான் நல்ல நிர்வாகம் என்று எம்முள் பலர் அடையாளம் கண்டு அதனையே நாமும் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்த்தனர்.

இந்த நடைமுறை பிழையென்று அரசியலுக்கும் நிர்வாகத்திற்கும் வந்தவுடனேயே நாங்கள் அடையாளம் காண நேரிட்டது. சில விடயங்களை நாம் அவதானித்தோம். அதாவது, நிர்வாக சேவை என்று ஒரு சேவையை உருவாக்கி, அதற்கான பயிற்சி அளித்து, அவர்களுக்கான நடைமுறைகளை - சட்ட திட்டங்களை - வகுத்து, அலுவலர்கள் அவற்றில் இருந்துவழுவநேரிட்டால் உத்தியோகபூர்வமாக மாற்று நடவடிக்கைகள் எவ்வாறு எடுப்பது என்பது போன்ற பல வரையறைகளை அரசாங்கம் வகுத்திருந்தது.

பக்கச் சார்பில்லாமல் தமது கடமைகளைச் சட்டப்படிசிரத்தையுடன் செய்வதையே நிர்வாகச் சட்டமும் கணக்கியல் சட்டமும் எம் அலுவலர்களிடம் எதிர்பார்த்தன. அதைச் செய்யவிடாது அரசியல்வாதிகள் தமக்குப் பக்கச்சார்பாக அலுவலர்கள் நடக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது பிழையென்றே எமக்குப்பட்டது.

ஆகவே, அலுவலர்கள் சட்டப்படி சிரத்தையுடன் பக்கச் சார்பின்றிக் கடமையாற்ற நாம் வழியமைத்துக் கொடுத்தோம். அண்மையில் மாற்றலாகிச் சென்ற வவுனியா அரசாங்க அதிபர் புஷ்பகுமார எனக்கு எழுதிய கடிதத்தில் அரசியல் ரீதியாகநான் எந்தவித உள்ளீடல்களிலும் இறங்காததைக் குறிப்பிட்டு தனது நன்றியைத் தெரிவித்தார்.

எமது அலுவலர்கள் எமது அரசியல் ரீதியான உள்ளீடல்கள் இன்றித் தமது கடமைகளைச் செய்தபடியால்தான் இந்த விருதுகள் தரப்பட்டுள்ளன என்று நம்புகின்றேன். இதில் உங்கள் ஒவ்வொருவரின் பங்கும் இருக்கின்றது. முக்கியமாக எமது பிரதம கணக்காளரினதும் அவரின் முன்னையவரினதும் பங்குகள் மிக அதிகமாக இருக்கின்றன.

வழிமுறைகளை, வரம்புகளை, வகுத்த நடைமுறைகளைக் கருத்திற்கொண்டு அரசியல் ரீதியான உள்ளீட்டல்கள் தமக்கு ஏற்படாது என்ற நம்பிக்கையுடன் எமது அலுவலர்கள் கடமையாற்றியமையால் தான்இந்தவிருதுகளைநாம் பெற்றுள்ளோம் என்று கருதுகின்றேன்.

இது விடயமாக பலர் பாராட்டுகளுக்குஉரியவர்கள்.

முதலில் எமது முதலமைச்சர்

(தொடர்ச்சி 17 ஆம் பக்கத்தில்...)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புச் செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
JSAC
மண்ணில் பிறந்திட்ட
மனிதருக்குள்
பெண்ணென்றும்
ஆணென்றும் பேதமில்லை.
16
2017
யாழ். சமூக செயற்பாட்டு மையம்

### நாளை

30.11.2017
வியாழக்கிழமை
நட்சத்திரம் :ரேவதி பி.ப. 1.11 வரை
திதி : துவாதசி பி.இ 4.09 வரை
சுபநேரம் : 7.44 – 9.14 வரை
இராகுகாலம்: 1.44 – 3.14 வரை

# நிதிமோசடி விசாரணைகள் நிறைவு; விரைவில் ஜனாதிபதியிடம் அறிக்கை




கொழும்பு, நவ. 29

பெரும் நிதிமோசடி தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்துவரும் ஜனாதிபதி ஆணைக்குழு, ஜனாதிபதிக்கு வழங்கவேண்டிய அறிக்கை தயாரிக்கும் பணி இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

இந்த விசாரணை அறிக்கை இந்த வாரத்திற்குள் இறுதிப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இந்த அறிக்கையை கையளிப்பதற்காக ஜனாதிபதியிடம் திகதி ஒன்று கோரப்பட்டிருக்கிறது என்றும் அந்தப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 17 விசாரணைகள் தொடர்பான அறிக்கையே இவ்வாறு தயாரிக்கப்பட்டு வருகின்றது.

பெரிய நிதிமோசடி தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்துவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆயுட் காலம் கடந்த செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்தது.

தற்சமயம் அறிக்கை தயாரிக்கும் பணியில் இந்த ஆணைக்குழு ஈடுபட்டு வருகின்றது.

கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற நிதி முறைகேடுகள் தொடர்பில் இந்த ஆணைக்குழு விசாரணைகளை நடத்தியதோடு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உட்பட பலரிடமும் வாக்குமூலம் பதிவுசெய்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 23 லட்சம் ரூபாவுடன் ஒருவர் கட்டுநாயக்காவில் கைது!



கொழும்பு, நவ.29

சட்டவிரோதமான முறையில் ஒருதொகை பணத்தை வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்ல முயற்சித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்றையதினம் அதிகாலை சுங்க அதிகாரிகளால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 23 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பணம் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த 46 வயதுடைய இந்த சந்தேக நபர் இந்தப் பணத் தொகையுடன் டுபாயிற்குச் செல்ல திட்டமிட்டிருந்தார் என ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்தது.

சந்தேக நபரான வர்த்தகருக்கு ஒரு லட்சம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

(க)

## சிவனொளிபாதமலை பருவகால பூஜை வழிபாடு!

கொழும்பு, நவ. 29

சிவனொளிபாதமலை பருவகால பூஜை வழிபாடு எதிர்வரும் முதலாம் ஆம் திகதி வெள்ளிக்கிழமை பெல்மதுளை கல்பொத்ஹேன ரஜ மஹா விகாரையில் விசேட பூஜையுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 02 ஆம் திகதி காலை பெல்மதுளைகல்பொத்ஹேன விகாரையிலிருந்து புத்தரின் உருவச்சிலை சிவனொளிபாதமலைக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளதாகவும் ஸ்ரீபாத மாநாயக்க பெல்மதுளை கல்பொத்ஹேன ரஜ மஹா விகாராதிபதி தெங்கமுவ தம்மதின்ன ஹிமி தெரிவித்தார். விகாரையிலிருந்து மூன்று வழிகளில் ஊர்வலம் செல்லவுள்ளது.

பெல்மதுளை, இரத்தினபுரி, பலாபத்த, ஸ்ரீ பாகம வழியாகவும் பெல்மதுளை, பலாங்கொடை, பொகவந்தலாவை வழியாகவும் பெல்மதுளை, இரத்தினபுரி, அவிசாவளை, கினிகத்தேனை, மஸ்கெலியாவழியாகவும் நல்லதண்ணியைச் சென்றடையும்.

ஊர்வலத்தின்போது பொலித்தீன், பிளாஸ்ரிக், மதுபானம், சங்கீத பொருள்கள் போன்றவற்றை எடுத்துவர வேண்டாமெனவும் இவற்றை சோதனையிட பொலிஸாரும் இராணுவத்தினரும் விசேட கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் விகாராதிபதி தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதியை விமர்சிக்கக்கூடாது; பிரதமரிடமிருந்து சிறப்பு உத்தரவு

கொழும்பு, நவ. 29

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை விமர்சிக்கும் முயற்சிகளில் எவரும் ஈடுபட வேண்டாம் என்று பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான அவசர சந்திப்பொன்று நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இதன்போதே தமது கட்சி உறுப்பினர்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த உத்தரவை பிறப்பித்திருக்கின்றார்.

இதேவேளை, மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்களுக்குத் தொடர்பு இருக்கிறது எனத் தகவல்கள் வெளியாகிய அதேவேளையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் தொடர்பிருக்கிறது என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனிடையே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்கள் பகிரங்க மேடைகளில் விமர்சித்திருந்தனர் அத்தோடு, அதற்கு பதிலடி வழங்கிய ஜனாதிபதி, இந்த ஆட்சியிலும் ஊழல்கள் தொடர்ந்தால் தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டு அதற்கெதிராகப் போராடுவேன் எனச் சூளுரைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## எயிட்ஸ் நோய் தொடர்பில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு!



கொழும்பு, நவ. 29

உலகளாவிய எயிட்ஸ் தடுப்பு தினத்தை முன்னிட்டு பொதுமக்களுக்கு அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நேற்று இடம்பெற்றது.

இதில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆறுமுகம் கேதீஸ்வரன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கனகராஜ் நந்தகுமார் மற்றும் பாலியல் தொற்று நோய் தடுப்பு மற்றும் எயிட்ஸ் நோய் தடுப்பு வைத்திய நிபுணர் பிரியந்த பட்டெகல்ல ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கருத்தரங்கில் வைத்திய நிபுணர் பிரியந்த பட்டெகல்ல எயிட்ஸ் தொடர்பாக விளக்கமான கருத்துரை வழங்கினார்.

## இலங்கையின் கடற்பகுதிகளில் மழையுடன் கூடிய காலநிலை!

கொழும்பு, நவ. 29

நாட்டிலும், நாட்டின் கடற்பகுதியிலும் மழையுடன் கூடிய காலநிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

குறிப்பாக மேற்கு, கிழக்கு, ஊவா, சப்ரகமுவ மற்றும் தென்மாகாணங்களில் சுமார் 75 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகும் என்று திணைக்களம் நேற்றுவெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மணிக்கு 50 கிலோ மீற்றர் வேகத்தில் பலமான காற்று வீசும்.

### வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

மேற்கு, சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் காலை வேளைகளில் பனிமூட்டமான காலநிலை காணப்படும்.

நாட்டின் கடற்கரையோரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். சில பகுதிகளில் கன மழை பெய்யும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழையின்போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும். இடிமின்னலிலிருந்து பொதுமக்கள் அவதானமாகச்செயற்படுமாறு திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

(க)







நேற்று மட்டு காந்தி பூங்கா அருகில்

# கிழக்கு மாகாண ஆசிரியர் நியமனத்தில் உள்வாங்காத பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்!

கிழக்கு மாகாண ஆசிரியர் நியமனத்தில் உள் வாங்கப்படாத பட்டதாரிகள் நேற்றையதினம் மட்டக்களப்பு காந்தி பூங்கா அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசியல்வாதிகளும், ஆளுநரும் தங்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டனர் எனத் தெரிவித்த பட்டதாரிகள், ஆசிரிய நியமனப்பரீட்சையில் 40 புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற அனைவருக்கும் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

அத்துடன், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள், மட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளனர்.

தங்களது பிரச்சினை தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித்த போகொல்லாகமவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளோம் எனவும், அதன் பிரதி கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஜீ.கே. முத்து பண்டாவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

## கிழக்கு ஆளுநரைச் சந்தித்தார் பிரித்தானிய பிரதித் தூதுவர்





கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகமவிற்கும் பிரித்தானிய பிரதித் தூதுவர் டொம் பேன்னிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் பிற்பகல் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் டொம் பேன், கிழக்கு மாகாணத்தில் அனைத்து இன மக்களும் இன நல்லிணக்கம், அபிவிருத்தி, அரசியல் தொடர்பாக ஆளுநரிடம் வினவியதுடன் கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அதிகளவில் வாக்குகள் கிடைக்கப்பெற்றன. அந்த வாக்குகள் ஆதரவுகள் தற்போதும் தொடர்ந்தும் நீடிக்கின்றதா? எனவும் பிரித்தானியப் பிரதித் தூதுவர் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை, கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்துள்ளனர். சுற்றுலாத்துறை, கல்வித்துறை போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு எதிர் காலத்தில் கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி அடையச்செய்வதே நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

## மலசலகூடக் குழியில் விழுந்து 3 வயதுச் சிறுவன் பரிதாபச் சாவு!

அம்பாறை மாவட்ட அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அஷ்ரப் நகர் கிராமத்தில் மலசல கூடத்திற்காக வெட்டப்பட்ட குழியில் வீழ்ந்து சிறுவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த இரண்டு தினங்களாகப் பெய்து வரும் அடை மழை காரணமாக வீட்டின் ஓரமாக மலசல கூடத்திற்காக வெட்டப்பட்டிருந்த குழியில் நீர்நிரம்பியிருந்தது. இந்த நிலையில் அப்பக்கமாக விளையாடிக் கொண்டிருந்த மூன்று வயதுடைய சவுறுதீன் ஹிமாஸ் அஹ்தி என்ற சிறுவன் குழியில் தவறி வீழ்ந்து மரணமடைந்துள்ளார்.

வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனைக் காணாது தேடிய போது அச்சிறுவன் வைத்திருந்த தடியொன்று நீரில் மிதப்பதை உறவினர் கண்டுள்ளனர். அக்குழியினுள் தேடிய



போது சிறுவன் உயிரிழந்து சடலமாகக் காணப்பட்டான் என மரணமடைந்த சிறுவனின் குடும்பத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

மலசலகூடம் அமைப்பதற்காக வெட்டப்பட்டிருந்த குழியில் நிர்மாணப் பணி இடம்பெறவிருந்த போதிலும் அடை மழை காரணமாக மலசலகூட நிர்மாணப் பணி பிற்போடப்பட்டிருந்தது என உறவினர்கள் தெரிவித்தனர்.

## மாவீரர்களின் எண்ணங்கள், அபிலாஷைகள் தமிழரிடம் இருந்துகொண்டே இருக்கின்றன

### மாவீரர் தின நிகழ்வில் சிறிநேசன் எம்.பி.

மாவீரர்களின் எண்ணங்கள், அபிலாஷைகள், அவர்களின் சுதந்திர வேட்கைகள், காற்றோடு காற்றாகவும், மூச்சோடு மூச்சாகவும் தமிழர்களிடத்தில் இன்னும் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை எவரும் மறுதலிக்க முடியாது. என மாவீரர் தின நிகழ்வில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

உண்மையான சுதந்திரம், உண்மையான உரிமை என்பதை மற்றவர்கள் கொச்சைப்படுத்தினாலும், இந்த உரிமைச் சுதந்திரம், விடுதலை என்பது தமிழர்களுக்கு வேண்டியதொன்றாகும் என்பதைச் சர்வதேசமும் உணர்ந்துள்ளது.

இலங்கையில் காணப்பட்ட பேரினவாதச் சிந்தனைகள், அவ்வப்போது காணப்பட்ட அடக்கு முறைகள், பெருந்தேசிய எண்ணத்தினால் நடந்து கொண்ட விளைவுகள் என்பன அறவழியிலோ, அகிம்சை வழியிலோ எதையும் பெற முடியாது என்ற எண்ணத்தை உருவாக்கியது. இதனால் அன்று இளைஞர்கள் போராளிகளாக மாறி தமிழர்களின் விடுதலைக்காகப் போராடினர்கள்.

அந்த விடுதலைப் போராட்டத்தில் எமது இளைஞர், யுவதிகள் போராளிகளாக இருந்து ஆயிரக் கணக்கில் உயிரை நீத்துத் தமிழர்களின் சுதந்திரம் மற்றும் விடு



தலைகளுக்காக அவர்களது மூச்சை விட்டிருக்கின்றார்கள்.

மாவீரர்களின் எண்ணங்கள், அபிலாஷைகள், அவர்களின் சுதந்திர வேட்கைகள், காற்றோடு காற்றாகவும், மூச்சோடு மூச்சாகவும் தமிழர்களிடத்தில் இன்னும் இருந்து கொண்டேதான் இருக்கின்றன என்பதை எவரும் மறுதலிக்க முடியாது.

எனவே, தமிழர்களின் விடுதலைக்காக தங்களை அர்ப்பணித்த தியாகிகளை நினைவுகூருகின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# சியோல் சென்றடைந்தார் ஜனாதிபதி மைத்திரி!

கொழும்பு, நவ. 29

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை தென்கொரியாவின் தலைநகர் சியோல் நகரைச் சென்றடைந்தார்.

தென்கொரியா நாட்டு ஜனாதிபதி மூன்ஜேனின் அழைப்பை ஏற்று மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதியை அந்த நாட்டு உதவி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் Cho Hyun தலைமையில் இன்சிஜோன் சர்வதேச விமான நிலையத்தில் ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பு வழங்கப்பட்டது.

ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வ வரவேற்பு நேற்று இடம்பெற இருந்தது.

இதனைத் தொடர்ந்து இரு நாட்டு தலைவர்களுக்கும் இடையில் இருதரப்பு பேச்சு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவுள்ளது.



# கரு, ரணில், சுமந்திரனைக் கொண்ட மூவரணி சமரசம் பேச நியமனம்!



கொழும்பு, நவ. 29

வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக மனுக்களைத் தாக்கல் செய்து உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு தடையை ஏற்படுத்தியுள்ள ஆறு மனுதாரர்களுடன சமரசப் பேச்சுக்களை நடத்த சபாநாயகர் தலைமையில் மூன்று பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ள ஆறு மனுதாரர்களுடனும் பேச்சுக்களை நடத்தி, இந்த மனுக்களை மீளப்பெற வைப்பதற்கே மூன்று பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் சபாநாயகர் கரு ஜெயசூரிய, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் சட்டமா அதிபர், தேர்தல் ஆணையத் தலைவர் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

# பலஸ்தீன மக்களுக்கான ஐ.நாவின் நட்புறவு தினம்!



கொழும்பு, நவ. 29

ஐக்கிய நாடுகள் சபையின் பலஸ்தீன மக்களுக்கான நட்புறவு தினம் லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது.


நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் சபாநாயகர் கரு ஜயசூரிய பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க இங்கு முக்கிய உரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் ஐ.நா. சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி உனா மெக்காலி, பலஸ்தீன நட்புறவுச் சங்கத் தலைவர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மற்றும் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

(க)

# போதைப்பொருள் விநியோகித்த நால்வர் கைது!



கொழும்பு, நவ. 29

கண்டி மற்றும் கட்டுகஸ்தோட்டை முதலிய இடங்களைச் சூழவுள்ள பிரதேசங்களில் கஞ்சா மற்றும் ஹெரொயின் போதைப் பொருளை விநியோகித்த சந்தேகத்தின் பேரில் நான்கு பேரை கைதுசெய்துள்ளோம் என கட்டு கஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் படி விசாரணைகளை மேற்கொண்ட கட்டு கஸ்தோட்டைப் பொலிஸார், இந்தப் பிரதேசத்தில் நீண்ட காலமாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த 55, 25 மற்றும் 30 வயதுகளையுடைய மூன்று சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர். எனத் தெரிவித்தனர்.

(க)

# கூட்டு அரசில் இருந்து விலகினாலேயே சுதந்திரக் கட்சியுடன் இணைய முடியும்!



ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார்

ஐக்கிய தேசியக் கட்சியுடனான கூட்டு அரசில் இருந்து விலகிக் கொண்டால் மாத்திரமே, சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைவது குறித்து ஆலோசிக்க முடியும் என்று மஹிந்த அணியைச் சேர்ந்தவரான முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே ஜி.எல். அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

‘சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் சிறிலங்கா பொதுஜன முன்னணிக்கும் இடையில் பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன.

எனினும், ஐ.தே.கவுடனான கூட்டு அரசாங்கத்தில் இருந்து விலகிக் கொண்டால் மாத்திரமே சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைய முடியும் என்பதே பிரதான நிபந்தனையாக உள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக பொது ஜன முன்னணி கட்டுப்பணத்தைச் செலுத்த ஆரம்பித்துள்ளது. அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் நாம் போட்டியிடுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஏர்பிலில் இலங்கைக்கான கௌரவ துணைச்செயலாளர் அலுவலகம்!

கொழும்பு, நவ. 29

குர்தீஸ் நாட்டின் தலைநகரான ஏர்பிலில் இலங்கைக்கான குர்தீஸ்தான் பிராந்திய கௌரவ துணைச்செயலாளர் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிராந்தியத்தின் முதலாவது தூதுவராக அகமட் ஜலால்தீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

குர்தீஸ் பிராந்தியத்திற்கும் இலங்கைக்குமிடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இந்த நடவடிக்கை ஆரம்பமாக அமையும் என்று ஈராக்கிற்கான இலங்கைத் தூதுவர் நிரஞ்சன் அசோக் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

(க)

# 250 மாணவர்களை பங்குகொள்ள செய்த கண்டி நிகழ்வு தொடர்பில் விசாரணை!

கொழும்பு, நவ. 29

கண்டி கண்ணுருவ என்ற இடத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் 250 மாணவர்களை பங்குகொள்ள செய்ததன் மூலம் அந்த மாண வர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் முன் வைக்கப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாக இதுதொடர்பான விசாரணை நடைபெற்றது.

விசாரணையின் பின்னர் சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

1995ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க குற்றவியல் பிரிவிற்குட் பட்டதான 308ஆவது சரத்து (அ) அமைவாக வழக்கு தொடரக்கூடியமை குறித்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சட்டமா திணைக்களத்திடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைவாக இதுதொடர்பிலான நடவடிக்கை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(க)



# களமிறங்கும் வேட்பாளர்கள் தொடர்பில் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்!

**பவ்ரல் தெரிவிப்பு**

கொழும்பு, நவ. 29
உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எந்த தகைமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்பது, தொடர்பில் கட்சிகள் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என தேர்தல்களை கண்காணிக்கும் அமைப்பான பவ்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது

இந்தநிலையில் கட்சி ஒன்று பொருத்தமற்ற வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்யுமாயின் அது தொடர்பில் நாட்டுக்கு தெரியப்படுத்த தாம் தயார் எனவும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (க)

# வர்த்தமானிக்கு எதிரான மனுக்களை நாளையே விசாரிக்குமாறு கோரிக்கை

கொழும்பு, நவ. 29
உள்ளூராட்சி சபைகளின் எல்லைகள் தொடர்பான வர்த்தமானி அறிவிப்புக்கு எதிரான மனுக்களை தள்ளுபடி செய்யக் கோரியும், அந்த மனுக்களை நாளை 30 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கக் கோரியும், சட்டமா அதிபர் தரப்பில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் டிசெம்பர் 5 ஆம் திகதி வரை இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஏற்பாடுகளில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில், வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை தள்ளுபடி செய்யக் கோரி சட்டமா அதிபர் தரப்பில் நேற்று மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

அத்துடன், எதிர்வரும் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த இந்த மனுக்களை, முன்கூட்டியே நாளை 30 ஆம் திகதி அவசர வழக்காக விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் சட்டமா அதிபர் நேற்றுமுன்தினம் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

## தினசரி ராசி பலன் 29.11.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் கார்த்திகை திங்கள் 14ஆம் நாள் புதன்கிழமை. தசமி திதி பகல் 10.51வரை பின்னர் ஏகாதசி. நட்சத்திரம் - உத்திரட்டாதி மாலை 5.12 மணி வரை பின்னர் ரேவதி. சித்த யோகம் மாலை 5.12 மணி பின்னர் அசுபயோகம்.
**ராகுகாலம்** - பகல் 11.58 மணி முதல் 1.25 மணிவரை.
**சுபநேரம்** - மாலை 4.49 மணிமுதல் 6.20 மணிவரை.
**திவசம் செய்ய வேண்டிய திதி** - கார்த்திகை மாத வளர்பிறை ஏகாதசி.
**பிறந்த நட்சத்திர வழிபாடு:** உத்திரட்டாதி.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** யோசனையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் கருத்துவேறுபாடு உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு சக உத்தியோகத்தர்களுடன் வீண் சச்சரவு உண்டாகும்.

**ரிஷபம்:** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பட்டம் உதவிகள் தேடிவரும். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் பதவிகளைப் பெறுவார்கள்.

**மிதுனம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றது. பொருள் வரவு மத்திமமாக இருக்கும் செய்யும் தொழிலில் ஓரளவு வருமானம் கிடைக்கும். உடல்நலனில் கவனம் தேவை. கவனக்குறைவால் பொருள் இழப்பு ஏற்படலாம்

**கடகம்:** ஆக்கபூர்வமான நாள் வருமானம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உறவினர்கள், நண்பர்கள் உறுதுணையாக இருப்பார்கள்.வியாபாரத்தில் ஆக்கபூர்வமாக முன்னேற்றம் ஏற்படும்.

**சிம்மம்:** கவலையான நாள் எதிர்பார்த்த பணமும் வரத்தாமதமாகும். உடல் நலம் குன்றும் பிள்ளைகளால் கவலை உண்டாகும் .உத்தியோகத்தில் வேலைச் சுமை பொறுப்புகள் அதிகரிக்கும்.

**கன்னி:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சமமாக இருக்கும். குடும்பத்தினருக்கு மனக்கஷ்டம் உண்டாகும் தொடங்கும்.கருமங்கள்நிறைவேறாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும்.

**துலாம்:** இன்பமான நாள் பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். வீடு வாகன வசதிகள் பெருகும்.

**விருச்சிகம்:** இனிமையான நாள். பணப்புழக்கம் திருப்தியைத்தரும். குடும்பத்தில் இனிமை கொலுவிருக்கும்.

**தனுசு:** துயரமான நாள். பொருளாதாரம் நலிவடையும். வீண்அலைச்சல்களில் உடல் நலம் பாதிப்படையும். உடன் பிறந்தவர்களால் தொல்லைகள் வரும். வியாபாரத்தில் மந்த நிலை நீடிக்கும்.


**மகரம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு மத்திமமாக இருக்கும். கடுமையாக உழைத்தால் கணிசமான நாள் கிட்டும்.

**கும்பம்:** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்ப உறவில் அன்பும் பண்பும் நிறைந்திருக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைத்து வசதியான இடமாற்றம் பெறுவார்கள்.

**மீனம்:** நன்மையான நாள் நிதிநிலைமை வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். சொத்து விஷயமாக நல்ல செய்தி கிடைக்கும். இது நாள் வரை வாட்டி வதைத்த நோய்கள் தீரும்.

**சந்திராட்டமநாள்:** மகம், பூரம் உத்தரம் 1ஆம் கால் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று நற்காரியங்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும்.

# அண்ணன், தங்கை இருவர் மாயம்: மஸ்கெலியா பகுதியில் பதற்றம்!



கொழும்பு, நவ. 29
மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கவரவில தோட்டம் பாக்றோ பிரிவில் வசித்து வந்த அண்ணன், தங்கை இருவர் காணாமல் போனமை தொடர்பாகவே நேற்றுக்காலை அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

கொழும்பு கணேமுல்ல பகுதியில் உள்ள வியாபார நிலையத்தில் பணிபுரிந்த சுப்பிரமணியம் மகேந்திரன் (வயது 28), பரமேஸ்வரன் மகாலெட்சுமி (வயது 19) ஆகிய மேற்படி அண்ணன், தங்கை இருவரும் இவர்களின் தங்கையின் பூப்புப் புனித நீராட்டு விழாவிற்காக கடந்த 23 ஆம் திகதி பாக்றோ தோட்டத்திற்கு கெப் ரக வாகனம் ஒன்றில் வருகை தந்திருந்தனர்.

கடந்த 25 ஆம் திகதி இந்த விழா நடைபெறுவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்பாக வருகைதந்த இவர்கள், கடந்த 26 ஆம் திகதி முதல் காணாமற் போயுள்ளனர் என மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டது.

காணாமற் போனவர்களின் கையடக்கத் தொலைபேசி ஒன்று காணாமற் போனது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்துவிட்டு வருகிறோம் எனக் கூறிச்சென்ற இவர்கள், காணாமற் போயிருக்கின்றனர் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், இவர்கள் இருவரும் பயணம் செய்த கெப் ரக வாகனம் கவரவில சிங்களப்பாடசாலையொன்றிற்கு அருகில் அநாதரவாகக் காணப்படுகிறது என பாடசாலைக்குச்சென்ற மாணவர்கள் சிலரால் உறவினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உறவினர்கள் மஸ்கெலியா பொலிஸாரின் கவனத்திற்குகொண்டு வந்துள்ளனர். மஸ்கெலியா பொலிஸார் நேற்றுக் காலை சம்பவ இடத்துக்கு விரைந்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு மோப்ப நாயையும் ஈடுபடுத்தியுள்ளனர்.

இதன்போது பொலிஸ் மோப்ப நாய் கவரவில ஆற்று பகுதியை நோக்கிச் சென்றதையடுத்து இவர்கள் இருவரும் ஆற்றில் வீழ்ந்து உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அதேவேளை, காணாமற் போயிருந்தனர் என்று தெரிவிக்கப்படும் மேற்படி யுவதி மற்றும் இளைஞனின் காலணி, கைக்குட்டை, ஆடைகள் ஆகியன ஆற்றுப் பகுதியிலும், கெப் ரக வாகனத்திலும் காணப்படுகின்றமையைப் பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

இந்த நிலையிலேயே, இவர்கள் ஆற்றில் வீழ்ந்திருக்கலாம் எனச் சந்தேகம் கிளப்பப்பட்டுள்ளது. இவர்கள் குளிக்கச் சென்று நீரில் மூழ்கியிருக்கலாம் அல்லது தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸாரால் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இந்த ஆற்று பகுதியில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கெனக் கொழும்பிலிருந்து சுழியோடிகள் மற்றும் கடற்படையினர்களின் உதவிகளையும் மஸ்கெலியா பொலிஸார் நாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நேற்று மூடப்பட்டது காலி முகத்திடல் வீதி

கொழும்பு, நவ. 29
ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் இருந்து காலிமுகத்திடல் வரையான வீதி நேற்றுத் தற்காலிகமாக மூடப்பட்டது.

அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள் மேற்கொண்டு வரும் எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக அந்த வீதி மூடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வாகன சாரதிகள் மாற்று வழிகளை பயன்படுத்துமாறு பொலிஸார் நேற்று வேண்டுகோள் விடுத்திருந்தனர். (க)

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை-

**வவுனியா பிரதேசத்தில்**
பட்டானிசூரிலிருந்து நெளுக்குளம் ஊடாக இராயேந்திர குளம் வரை, ஓமேகா லைன், அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, ஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை,அஸ்வி அரிசிஆலை, ஜீவன் அரிசி ஆலை, பம்பைமடு கிராமம், கற்பகபுரம் கிராமம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம்தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் எம். துவாரகன் அறிவித்துள்ளார். (இ)

காலைக்கதிர்
Kalaikkathir



**காரைதீவு பிரதேசத்தின் இருப்பு, இறைமை, பாதுகாப்பு, அபிவிருத்தி, அடையாளம், தனித்துவம் ஆகியவற்றை பேணிப் பாதுகாக்கின்ற செயல் திட்டத்தின் ஓர் அம்சமாகவே எதிர்வருகின்ற உள்ளூராட்சி தேர்தலில் எந்த அரசியல் கட்சிகளுக்கும் இடம் கொடுக்கப் போவதில்லை என்று ஊர் மக்கள் கூடி ஏகோபித்த தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர் என்று காரைதீவு மகா சபையின் நிறைவேற்றுக் குழு முக்கியஸ்தர் ஆறுமுகம் பூபாலரட்ணம் வழங்கிய சிறப்பு பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

**வருகின்ற உள்ளூராட்சித் தேர்தலில் காரைதீவு பிரதேச சபைக்கு ஒரே ஒரு சுயேச்சை குழு மாத்திரம் காரைதீவில் இருந்து போட்டியிட உள்ளது. இது தொடர்பாகவும், சமகால அரசியல் நடப்புகள் தொடர்பாகவும் அவர் பேட்டியில் விவரித்துள்ளார். அவரது நேர்காணல் வருமாறு:-**



## மகாசபை உருவாக்கம் பெற்றது அரசியல் நோக்கத்துக்காக அல்ல

# காரைதீவு பிரதேச சபைக்கு எந்தக் கட்சிகளுமே போட்டியிட அனுமதியில்லை

## சுயேச்சைக்குழு மட்டுமே களம்இறங்க ஊர்மக்கள் ஒன்றுகூடி ஏகோபித்த முடிவு

**கேள்வி: உங்களுடைய அரசியல், சமூக செயற்பாடுகள் குறித்து கூறுங்கள்?**

**பதில்:** நான் கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசு கட்சிச் சார்பாக அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டு கணிசமான வாக்குகளைப் பெற்றுக் கொடுத்து கூட்டமைப்பின் வெற்றிக்கு பங்களிப்பு வழங்கி இருக்கின்றேன்.

நிந்தவூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசமாக காரைதீவு இருந்தபோது காரைதீவுக்கு என்று தனியான பிரதேச சபை கிடைப்பதற்கு முன்னரான கடைசி உள்ளூராட்சி சபை தேர்தலில் நிந்தவூர் பிரதேச சபைக்கு எனது தலைமையிலான சுயேச்சைக் குழு காரைதீவில் இருந்து போட்டியிட்டதுடன் இரு ஆசனங்களை வென்றது.

அதுமட்டுமன்றி அகில இலங்கை இந்து சம்மேளனத்தின் செயற்குழு உறுப்பினராக விளங்குவதோடு காரைதீவு ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமிகள் ஆலய தலைவராகவும், காரைதீவு பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும், மத்தியஸ்தர் சபை, இணக்க சபை, சமாதான குழு, பிரஜைகள் குழு ஆகியவற்றின் உறுப்பினராகவும் கௌரவ பதவிகள் வகித்து உள்ளேன்.

எனக்கு இப்போது 73 வயது. எப்போதும் சமூகத்தோடு ஒத்து இணைந்த பொது வாழ்க்கையையே எனக்கு அறிவு தெரிந்த பராயம் முதல் மேற்கொண்டு வருகின்றேன்.

**கேள்வி: காரைதீவு மகா சபை என்கிற பெயர் வித்தியாசமானதாக உள்ளதே?**

**பதில்:** எனக்குத் தெரிந்த வகையில் பிரதேச மட்டத்தில் இவ்வாறான ஒரு மகா சபை பரந்த நோக்கத்தில் விரிந்த செயற்பாடுகளுடன் இந்நாட்டில் குறிப்பாக தமிழர் பிரதேசத்தில் அமைக்கப்பட்டு உள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவே ஆகும். மொழி, நிலம், சமயம், அரசியல், கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், நாகரிகம், தொழில் அபிவிருத்தி, வாழ்வாதாரம் போன்ற இன்னோரன்ன விடய பரப்புகளில் காரைதீவை மேம்படுத்துதல் மற்றும் காரைதீவு பிரதேச மக்களுக்கு வழிகாட்டல், அறிவூட்டல், விழிப்பூட்டல் ஆகியவற்றை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை இலட்சிய நோக்கங்களாக கொண்டு காரைதீவு மகா சபை உருவாக்கப்பட்டு உள்ளது. இவ்வாறான ஒரு மகா சபை காரைதீவின் மிக நீண்ட கால தேவையாக இருந்து வந்துள்ள நிலையில் காரைதீவு பிரதேச மக்களின் நீடித்த அபிலாஷை தற்போது தான் கைகூடி உள்ளது. இதை உருவாக்குவதில் முன்னோடிகளில் ஒருவராக முன்னின்று செயற்பட்டதில் பெருமையும் பெருமிதமும் அடைகின்றேன்.

காரைதீவைச் சேர்ந்த சமுதாய நலன் விரும்பிகள், துறை சார்ந்த நிபுணர்கள் ஆகியோரை உள்ளீர்த்து காரைதீவு மகா சபை உருவாக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக சி. நந்தீஸ்வரன் விளங்குகின்றார். காரைதீவு மகா சபையால் கையாளப்பட உள்ள ஒவ்வொரு துறைக்கும் என்று ஒவ்வொரு விசேட உபகுழுவை அமைத்து காரைதீவு மகா சபையின் செயற்பாடுகளை இன்னும் சிறப்பாகவும், துரிதமாகவும் முன்னெடுக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

**கேள்வி: எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் கல்முனை மாநகர சபைக்கு சாய்ந்தமருதில் இருந்து அரசியல் கட்சிகளைக் போட்டியிட அனுமதிப்பது இல்லை என்றும் ஒரே ஒரு சுயேச்சைக் குழுவை மாத்திரம் இறக்குவது என்றும் சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசல் நிர்வாகம் தீர்மானித்ததை பின்பற்றியே காரைதீவு மகா சபை உருவாக்கப்பட்டு காரைதீவு பிரதேச சபைக்கு காரைதீவில் இருந்து கட்சி அரசியலுக்கு அப்பால் ஒரே ஒரு சுயேச்சை குழுவை இறக்க தீர்மானம் எடுக்கப்பட்டு உள்ளது என்று கூற முடியாதா?**

**பதில்:** நிச்சயமாக இல்லை. நான் முன்னதாக காரைதீவு மகா சபை தேர்தல் நோக்கத்துக்காக திடீரென்று உருவாக்கம் பெறவில்லை என்று சுட்டிக் காட்டி இருந்தேன். காரைதீவைச் சேர்ந்த சமுதாய முன்னோடிகள் பலரும் பல பல சந்தர்ப்பங்களில் பல முறை கூடி கதைத்து ஊர் மக்களின் ஆசிர்வாதத்துடன் காரைதீவு மகா சபையை உருவாக்கி உள்ளோம். குறுகிய கால அரசியல் நோக்கங்கள் காரைதீவு மகா சபைக்கு கிடையா. ஆனால் காரைதீவு மகா சபையால் கையாளப்பட வேண்டிய துறை சார்ந்த விடயங்களில் ஒன்றாக அரசியல் உள்ளது. காரைதீவைப் பொறுத்த வரை இது மிக முக்கியமாக கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு விடயமும் ஆகும்.

காரைதீவு பிரதேச சபை எல்லைக்குள் இரு சமூகங்கள் வாழ்கின்றன. எங்களுடைய சமூகம் பல கட்சிகளாக பிரிந்து நின்று தேர்தல் கேட்கின்றபோது வாக்குகள் சிதறுண்டு நாம் இரண்டாம் நிலைக்கு தள்ளப்படக் கூடிய வாய்ப்பு கண் முன் தெரிகின்றது. அவ்வாறு நிகழாமல் நாம் முன்னிலை வகிப்பதற்கான வியூக உத்தியாகவே கட்சி அரசியலுக்கு அப்பால் எமது அரசியல் சமூகச் செயற்பாட்டாளர்களை சுயேச்சையாக ஒரே அணியில் இறக்குவது என்று ஊர் கூடி முடிவெடுத்து உள்ளோம். எமது அரசியல் செயற்பாட்டாளர்களும் ஊரின் நலனை முன்னிறுத்தி அவர்களுடைய கட்சி நலன் சார்ந்த தேர்தல் செயற்பாடுகளை இத்தேர்தலில் கை விட்டுள்ளார்கள். இத்தீர்மானத்தை நாம் பத்திரிகைகள் மூலம் பகிரங்கப்படுத்தி இருப்பதோடு கட்சிகளின் தலைமையகங்களுக்கும் அறியப்படுத்தி உள்ளோம். ஏதேனும் ஒரு கட்சி வருகின்ற தேர்தலில் காரைதீவு பிரதேச சபைக்கு போட்டியிட வேட்பு மனுத் தாக்கல் செய்யுமாயின் அக்கட்சியை நாம் துரோகிகள் பட்டியலில் என்றென்றைக்கும் சேர்த்து விடுவோம். அதே போல கட்சி வேட்பாளர்களையும் ஊரில் இருந்து விலக்கி விடுவோம். வேறு சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட முடியாது.

என் போன்றவர்களுக்கு காரைதீவு பிரதேச சபை தேர்தலில் போட்டியிட பல கட்சிகளிடம் இருந்தும் தொடர் அழைப்புகள் வந்து கொண்டிருக்கின்றபோதிலும் ஊரின் நலனுக்காக மாத்திரமே சுயேச்சை குழுவில் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம் என்பதையும் இந்த இடத்தில் கூறி வைக்கின்றேன். மேலும் சுயேச்சை குழுவுக்கான வேட்பாளர்கள் தெரிவு வெளிப்படைத் தன்மையுடனும், நீதியாகவும் நடத்தப்பட உள்ளது. வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்புபவர்கள் வட்டார ரீதியாக காரைதீவு மகா சபைக்கு விண்ணப்பிக்க முடியும். காரைதீவு மகா சபை ஒவ்வொரு வட்டாரத்துக்கும் நேரில் சென்று அங்கு உள்ள மக்களில் பெரும்பான்மையானோரின் ஆதரவையும், அபிமானத்தையும் பெற்ற செயற்பாட்டாளரை வேட்பாளராக நியமிக்கும்.

**கேள்வி: மாகாண சபை தேர்தல் தொகுதியை எல்லை நிர்ணயம் செய்கின்ற ஆணைக்குழு காரைதீவை பொத்துவில் தொகுதியில் இருந்து சம்மாந்துறையுடன் இணைக்க உத்தேச தீர்மானம் எடுத்து உள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளனவே?**

**பதில்:** காரைதீவு பிரதேச மக்களுக்கு இவை பேரதிர்ச்சி ஊட்டுகின்ற, விரும்பத்தகாத, ஆனால், உண்மையான செய்திகளே ஆகும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் மாகாண சபை தேர்தல் தொகுதிகளுக்கான எல்லைகளை நிர்ணயிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழு கடந்த 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை அம்பாறை மாவட்டத்துக்கான எல்லை நிர்ணயம் தொடர்பான அமர்வை நடத்தி உள்ளது. இதில் தமிழரசுக் கட்சி பங்கேற்று உள்ளது. மேலும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரனும் கலந்து கொண்டு உள்ளார். கல்முனையை நான்கு சபைகளாக பிரிப்பது குறித்தே இவ்வமர்வில் பேச உள்ளனர் என்று தமிழரசுக் கட்சி பிரமுகர்களால் காரைதீவில் உள்ள தமிழரசுக் கட்சி செயற்பாட்டாளர்களுக்கு சொல்லப்பட்டு இருந்ததாக தற்போது தகவல்கள் வெளியில் வந்துள்ளன..

ஆனால், பொத்துவில் தொகுதியுடன் இணைக்கப்பட்டு இருக்கின்ற காரைதீவு பிரதேசத்தைப் பிரித்து சம்மாந்துறை தொகுதியுடன் இணைக்க வேண்டும் என்று ஆணைக்குழுவுக்கு தமிழரசுக் கட்சி இவ்வமர்வில் பரிந்துரை செய்து உள்ளது. ஆணைக்குழுவும் இப்பரிந்துரையை ஏற்று காரைதீவை சம்மாந்துறை தொகுதியுடன் இணைக்கின்ற உத்தேச தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஆனால், மேற்படி அமர்வில் காரைதீவைச் சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளர்கள் எவரும் பங்கேற்று இருக்கவில்லை. மேலும், காரைதீவு மக்களின் அபிப்பிராயம், ஆலோசனை, கருத்து ஆகியவற்றை பெறாமலேயே தமிழரசுக் கட்சியின் பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. அதே போல ஆணைக்குழுவும் காரைதீவு மக்களின் விருப்பத்தைத் தெரிந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பொத்துவில் தொகுதியுடன் காரைதீவு தொடர்ந்து இருப்பதன் மூலமாக அல்லது கல்முனை தொகுதியுடன் இணைக்கப்படுவதன் மூலமாகவே தமிழர் பிரதிநிதித்துவத்தை தக்க வைத்து இருக்க முடியும் என்று அரசியல் அவதானிகள் எடுத்துச் சொல்கின்றார்கள்.

(12ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




## ராபர்ட் முகாபே இராஜினாமா செய்கிறார்

அவருக்கு எதிராக முதலில் ஸிம்பாப்வே இராணுவம் முன்நகர்ந்ததற்கு ஆறு நாள்களுக்குப் பின்னர், ஜனாதிபதி பதவியிலிருந்து ரோபர்ட் முகாபே இராஜினாமாச் செய்தார். ஆளும் கட்சியான ஸிம்பாப்வே ஆபிரிக்க தேசிய ஐக்கிய-தேசப்பற்று முன்னணியில் (ZANU-PF) அவருக்கு எதிரான கோஷ்டி எதிர்ப்பாளர்கள் தொடங்கிய பதவிநீக்க குற்றவிசாரணை மீது ஒரு நாடாளுமன்ற விவாதம் நடந்து கொண்டிருந்ததற்கு இடையே, அவர் இராஜினாமா அறிவிக்கப்பட்டது.

இராணுவம் அவர் மனைவி கிரேஸ் முகாபேயின் ஜி40 அணி இலக்கு வைத்தும் மற்றும் முன்னாள் துணை பிரதம மந்திரி எமர்சன் நான்காக்குவாவை (Emmerson Mnangagwa) ஆதரித்தும் நடவடிக்கை மேற்கொண்ட பின்னர், 37 ஆண்டுகளாக அந்நாட்டின் தலைமையில் இருந்து வரும் 93 வயதான முகாபே பதவியிலிருந்து இறங்க மறுத்திருந்தார். அண்மையில் அவர் கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்த நிலையில், அன்றைய நாளே உயர் மட்ட இராணுவ பிரமுகர்கள் பக்கவாட்டில் இருக்கையில் ஒரு



தொலைக்காட்சி உரையில் இராஜினாமா செய்ய அவர் மறுத்ததுடன், அதற்குப் பதிலாக அடுத்த மாதம் ஒரு கட்சி மாநாட்டைக் கூட்ட முன்மொழிந்தார்.

**முகாபேயின் இராஜினாமா செய்தி கிடைத்ததும் ஹராரேயில் பரவசமான காட்சிகள் நிலவின என்பதுடன் பேரணிகளும் நடத்தப்பட்டன என்றாலும், அவரது இராஜினாமா, முகாபே ஐ விட ஊழலில் சற்றும் குறையாத முதலாளித்துவ சக்திகளது அரசியல் மற்றும் பொருளாதார நோக்கங்களால் கட்டளையிடப்பட்ட ஓர் அரசியல் ஆட்சிக்கவிழ்ப்பு சதியின் விளைவாகும்.**

இறுதியில் முகாபே நாடாளுமன்றத்திற்கான ஒரு கடிதத்தில் அவர் இராஜினாமாவைச் சமர்ப்பித்தார், அது சபாநாயகர் ஜேகப் முடென்டாவால் கூடியிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் வாசிக்கப்பட்டது. இராணுவமும் ஊடகப் பிரிவுகளும் எதை உண்மையான மக்கள் எழுச்சி என்று அறிவித்தனவோ அத்தகைய ஒன்றிலிருந்து எந்தளவுக்குஅரசியல்பதவிக்கவிழ்ப்பு தவிர்க்கப்பட்டது என்பதற்கு அந்த சபையில் எழுந்த உற்சாக கூச்சல் ஓர் அறிகுறியாக இருந்தது. அவரின் முதிர்ந்த வயதுதான் அவர் மனைவியை "அதிகாரத்தைக் கைப்பற்ற" அனுமதித்தது என்று முகாபே மீது சுமத்தப்பட்டு, விசாரிக்கப்பட இருந்த குற்றச்சாட்டுக்களே கூட, எந்தவொரு துணை விளைவுகளையும் மட்டுப்படுத்தும் நோக்கத்தைப் பிரதிபலித்தது.




முகாபேயின் மாற்றீடாக உள்ள நான்காக்குவா, தசாப்தங்களாக அவர் யாருக்காக அமுலாக்க அதிகாரியாக செயற்பட்டாரோ அவரிடமிருந்து கோட்பாட்டுரீதியில் வேறுபட்டவர் இல்லை. இரண்டு வாரங்களுக்கு முன்னர் முகாபேயால் இவர் நீக்கப்பட்ட பின்னர்தான், இவர் தனது முன்னாள் எஜமானருக்கு எதிராக நகர்ந்தார், பின்னர் "Gucci Grace" ஐ (முகாபேயை ஊடகங்கள் குறிப்பிடும் பட்டப்பெயர்) சுற்றி இருந்த இளம் முதலாளித்துவ வர்க்க அடுக்கிற்கு ஆதரவாக, இராணுவத்திற்கு நெருக்கமாக இருந்த "பழைய படையின்" பிற அங்கத்தவர்களை ஓரங்கட்டினார்.

**முகாபேயின் நடவடிக்கைகள் விடுதலை இயக்கத்தின் மாவீரர்களை உதாசீனப்படுத்துவதாக இராணுவம் சித்திரிக்கிறது. 1980 களில் இருந்து பல தசாப்தங்களாக, ஒரு பிரதான பொருளாதார சக்தியாக ஆவதற்கு இராணுவம் அதன் பலத்தை முட்டுக் கொடுத்தது, ஆனால், இது உழைக்கும் மக்களை விலையாக கொடுத்து செல்வந்தர்களை வளர்ச்சியடையச் செய்தது. தங்களை விலையாக கொடுத்து நேர்மையற்ற ஓர் இளம் அடுக்கை அவர் ஊக்குவிக்கிறார் என்பதற்காக மட்டுமே தளபதிகள் முகாபே மீது ஆத்திரம் கொண்டிருந்தனர்.**

2001 இல் அமெரிக்க தூதர் எழுதிய மற்றும் விக்கிலீக்ஸால் வெளியிடப்பட்ட இரகசிய ஆவணங்களில், நான்காக்குவா ஸிம்பாப்வேயின் மிகப் பணக்கார மனிதராக குற்றஞ்சாட்டப்படுகிறார். அவர் ZANU-PF இல் நிதித்துறை செயலராக இருந்தபோது முறையற்ற வகையில் பெற்ற ஆதாயங்களும், அத்துடன் காங்கோவில் சட்டவிரோத கனிம வள சுரண்டல்களும், அவர் செல்வவளத்திற்கான ஆதாரங்களில் உள்ளடங்குகின்றன.

முகாபேக்கு எதிரான ஒரு நகர்வுக்கு ஆதரவு கோரி அவர் சென்ற முதல் புகலிடம், ஸிம்பாப்வேயின் மிகப் பெரிய முதலீட்டாளரான பெய்ஜிங் ஆகும், பதவியிலிருந்து நீக்கப்பட்டதும் நான்காக்குவா அங்கேதான் பயணித்தார். சுரங்கத் தொழில்துறை மற்றும் பிற முக்கிய தொழில்துறைகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அபராதம் விதித்த, "உள்நாட்டு மயப்படுத்தும்" கொள்கைக்கு முகாபே மீண்டும் திரும்பியதற்கு ஓர் எதிர்ப்பாளராகவும் "ஈடுபாடு கொண்ட"-நண்பராகவும் தன்னை முன்னிறுத்தியதன் மூலமாக, நான்காக்குவா, சீனா, அமெரிக்கா மற்றும் பிரிட்டனுக்கு முறையீடு செய்தார்.



**இந்த அரண்மனை ஆட்சிக் கவிழ்ப்பு சதிக்கு உடனடியாக பொறுப்பேற்ற மனிதரும், சிம்பாப்வே தேசிய இராணுவத்தின் தளபதியுமான ஜெனரல் கான்ஸ்டன்டைன் ஷிவென்காவும், ஒரு மிகப் பெரிய நிலமனை விற்பனை துறை பட்டியலுடன், சுமார் 100 நிறுவனங்களைக் கட்டுப்பாட்டில் கொண்டிருப்பவராக, ஒரு தொகுதி ஆடம்பரக்கார்கள் மற்றும் மலையென குவிந்த நகைகளுடன் மிகப் பெரும் செல்வந்தராவார்.**


சம்பவங்களை இராணுவம் எந்தளவுக்கு கையாண்டு வருகிறது என்பது அண்மையில்ஷிவென்காவெளியிட்ட அறிக்கையில் தெள்ளத்தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டது. ஸிம்பாப்வே விமானப்படைத் தளபதி பெர்ரன் சிஷிரி, பொலிஸ் ஆணையர் ஜெனரல் ஆகஸ்டைன் சிஹுரி, ஸிம்பாப்வே சிறைகள் மற்றும் சீர்திருத்த சேவைகளுக்கான ஆணையர் ஜெனரல் பராட்ஜைய் ஜிமொன்டி மற்றும் மத்திய உளவுத்துறை அமைப்பின் தற்காலிக தலைவர் ஆரோன் நிஹிபெரா ஆகியோர் பக்கவாட்டில் நிற்க, ஷிவென்கா, அமைதியை, வாழ்வை மற்றும் சொத்துக்களை அச்சுறுத்தக் கூடிய எவரொருவரின் எந்தவொரு நடவடிக்கைக்கும் எச்சரிக்கை விடுத்தார்.

ஸிம்பாப்வே மக்களுக்கு, அவர் அறிவித்தார், "அமைதியாக, பொறுமையாக, முழுவதையும் கண்காணித்தவாறு நாட்டின் சட்டங்களை மதித்திருக்க" வேண்டும், அதேவேளையில் "உங்களின் பாதுகாப்புப் படைகள்..." ஒபரேஷன் மரபு மீட்டமைப்பு' (Operation Restore Legacy) என்று குறியீட்டு பெயரைக் கொண்ட நடவடிக்கையுடன் முற்றுகையிட்டிருக்கும். "ஸிம்பாப்வே பல்கலைக்கழகத்தில் போராடி வரும் மாணவர்கள்" அமைதியாக இருந்து, திட்டமிட்டவாறு அவர்களின் கல்வி படிப்புகளை மேற்கொள்ள வேண்டும்" என்று ஷிவென்கா அவர்களை வலியுறுத்தினார்.

ஜனநாயக மாற்றத்திற்கான இயக்கம் (MDC) என்ற எதிர்ப்பு இயக்கத்தின் தலைவர் மோர்கன் ஸ்வன்கிராய், குற்றவிசாரணை நகர்வுக்குப் பின்னால் அணி திரண்டுள்ளார். ஸிம்பாப்வே தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் (ZCTU) முன்னாள் தலைவரான இவர், பசியிலிருக்கும் அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டுமென்ற அவர் விருப்பமே இப்போது நான்காக்குவா கன்னையுடன் தற்காலிகமாக அணி சேர்வதற்கான காரணம் என்று பேசுகிறார். ஆனால், அவரும், தொழிற்சங்க அதிகாரத்துவமும் ஸிம்பாப்வேயில் உள்ள முதலாளித்துவ சக்திகளுடனும், பிரிட்டன் மற்றும் அமெரிக்கா உட்பட பிரதான ஏகாதிபத்திய சக்திகளுடனும் அணி சேர்ந்துள்ளனர்.

(கேள்வி தொடரும்...)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமா கின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 20

## காரைக்குடி கம்பன் விழாவில் முதன்முதலாக... 18.03.1981

### குருவிடமும் திருவடி பெற்றேன்

நாங்கள் குருவினது இல்லத்திற்குச் சென்றதும் அவர் தனது பூஜையறை யிலிருந்த திருவடிகளைக் காட்டி, அவற்றை வணங்குமாறு எங்களுக்கு உத்தரவிட்டார். அத்திருவடிகள் காஞ்சி மகாபெரியவருடையவை எனவும், குருநாதரின் தந்தையார் காஞ்சி மடத்தில் கணக்கராய் இருந்த போது அவற்றைப் பெற்றுக்கொண்டாரென வும் அறிந்துகொண்டோம்.

குருநாதரின் உத்தரவுப்படி அத் திருவடிகளை வணங்கிய பின்பு மீண் டும் அவர் பாதங்களில் வீழ்ந்து வணங் கிய நான், ‘‘அத்திருவடிகள் உங்களுக் குரியவை. உங்கள் திருவடிகள் தான் எனக்குரியன. அவற்றை எனக்குத் தந்துவிடுங்கள்’’ என்று கேட்டு கண் கலங்கினேன். நெகிழ்ந்துபோன குரு நாதர், தனது மனைவியைச் சத்தமாய் அழைத்து, ‘‘ஏண்டி! இவன் ஏதோ கேக் கிறான். குடுத்திடு’’ என்றார். விசயம் விளங்காது வெளியே வந்த அம்மை யார், நான் குருநாதரின் திருவடிகளைக் கேட்டதும் கண்கலங்கிப்போனார். பிறகு, குருநாதரின் ஒரு சோடித் திரு வடிகளை பக்குவமாய் எடுத்துத் தந் தார்.

எல்லையற்ற மகிழ்ச்சி கொண்டேன் நான். இன்றும் எங்கள் பூஜையறையில் கம்பன் அடிப்பொடியினதும், குருநாத ரினதும் திருவடிகள் அமர்ந்து அருள் செய்தபடி இருக்கின்றன.

### குருநாதரின் வீடு

குருநாதரின் வீடு என்னை ஆச்சரி யப்படுத்தியது. குருநாதரின் துணை வியார், குருநாதரை விட எங்கள் மேல் அன்பு செலுத்தினார். அந்த வீட் டாருக்கு அன்பைத் தவிர வேறொன் றும் தெரிந்திருக்கவில்லை.

குருநாதரின் மூத்த மகன் ரவி அண்ணா, அவர் மனைவி சித்திரா. மூத்த மகள் மைதிலி அக்கா, அவர் கணவர் அம்மாஞ்சி, மற்ற பிள்ளை களான கோபால், அகிலா, மௌலி, மாது, சுந்தர், சாரதா என, அனைவரும் நீண்ட நாள் பழகியவர்போல, எங்கள் மேல் அன்பைப் பொழிந்தனர். குரு நாதரே, உட்கார்ந்து காய்கறி நறுக்கிக் கொடுத்து, என்னென்ன சமைக்க வேண்டுமென்று ‘மெனு’ கொடுப்பார்.

அம்மா, அக்கா, அண்ணி எல்லாரு மாக நிறையவே சமைப்பார்கள். எங் களுக்கு என்று மட்டுமென்றல்லாமல், அயல் வீடுகளில் இருக்கும் பெரிய வர்களையும் அழைத்து, எல்லாருக்கும் சேர்த்து விருந்திடுவார்கள். அவர்கள் பேச்சில் நகைச்சுவை எப்போதும் கலந்திருக்கும். அம்மாஞ்சி நகைச் சுவை மன்னர். நான் வீட்டிலிருந்து ‘ஹோட்டலுக்குப்’ புறப்படும் போது, வீட்டுப் பெண்கள் எனக்குப் பிடிக்கும் என்பதற்காக, ‘‘நாளைக்கு பூரி பண்ணு கிறோம் வாங்கப்பா!’’ என்று அன்பாக அழைப்பார்கள்.

குருநாதர் ‘‘அவனுக்கு மட்டும் இரண்டு டஜன் பூரி போடுங் கடி’’ என்பார். அம்மாவும் அக்காவும் அண் ணியும் ‘‘அப்படியெல்லாம் சொல்லா தேள்! நீ கட்டாயம் வந்துடுப்பா, நாளைக்கு பூரிய மறந்திடாதப்பா!’’ என்று திரும்பத் திரும்பச் சொல்வார் கள். அம்மாஞ்சி சிரிக்காமல் ‘ஏண்டி உங்க பூரியைக் காட்டி அவன மிரட் டுறேள்?’’ என்று கொமன்ட் அடிப் பார். எல்லோரும் வாய்விட்டு சிரிப் போம். அங்கு நாங்கள் தங்கிவிட்டு இலங்கைக்குக் கிளம்பும்போது புளிக் காச்சல், அப்பளம், வடாம் எனப் பல வகையான உணவுகள் செய்து தந்து, குருநாதரின் மனைவி ‘ரெயில்வே ஸ்ரேஷன்’ வரை அழுதழுது எங்களு டன் வருவார். ‘‘அங்கே சண்டயா மேப்பா? நீங்க அங்க போகத்தான் வேணுமா? இங்கேயே எங்க கூட இருக் கக் கூடாதா?’’ என்று, அந்தத் தாயார் கெஞ்சுகிறபோது நெஞ்ச மெல்லாம் கரைந்து போகும். குரு நாதரின் தெளிவு, நிதானம், அறிவு, கம்பீரம் எல்லாம், நெஞ்சை ஈர்க்கும் அற்புதங்கள். அந்த இல்லத்துடன் தொடர்புபட நான் என்ன தவம் செய் தேனோ?



குருநாதரின் குடும்பம்...

### குருநாதரின் பெருந்தன்மைகள்

குருநாதரைத் தெரியாதவர்கள், எண்பதுகளில் வெளியான ‘சங்கரா பரணம்’ சினிமாவில் வந்த, சாஸ் திரியை பார்த்தால்போதும், வடி வாலும், இயல்பாலும் எங்கள் குரு நாதர் அவர்போல் இருப்பார். காரைக் குடி விழாவில்தான் குருநாதருடன் நெருங்கிப் பழக முடிந்தது. அப்பழக் கத்தில் அவரது பெருந்தன்மைகள் பலவற்றைக் கண்டு நான் வியந்தேன். முதல் நாள் அவருக்கு அருகில் இருந்து உண்ணும் வாய்ப்புக் கிடைத்தது. அவரது எச்சில் சாப்பாட்டில் ஒரு பிடி வாங்கிச் சாப்பிட வேண்டும் என்று



எனக்குள் ஓர் ஆசை. பயந்து பயந்து அருகிலிருந்த அவரிடம் மெல்ல என் விருப்பத்தைச் சொன்னேன். வாய் விட்டுச் சிரித்தார். அருகிலிருந்த அறி ஞர் என்னவென்று விசாரிக்க, ‘‘அவன் ஆதீனபிரசாதம்கேட்கிறான்’’ என்றார். அன்பாக என்னைப் பார்த்துவிட்டு, என் கேள்விக்குப் பதில் தராமலே எழும்பிச் சென்றார். அவர் என்ன நினைத்தாரென்றே எனக்குத் தெரிய வில்லை.

★ ★ ★ ★

அந்த விழாவின் நிறைவு நாள் அன்று, நாட்டரசன் கோட்டை நிகழ்ச் சியில், அற்புதமான பேச்சொன்றைப் பேசிவிட்டு வெளியில் வந்த குரு நாதர், காற்று வாங்குவதற்காக வெளி யில் வந்து, காரொன்றில் சாய்ந்து கொண்டு நின்றார். அவர்பேச்சைக் கேட்டு மெய்சிலிர்த்துப்போன நான், அருகில் சென்று, ‘‘ஐயா! நான் உங் களுடனேயே இருக்க விரும்புகிறேன். ஒரு வேலைக்காரனாக வாவது, என்னைஉங்களுடனேயேவைத்திருங் கள்’’ என்றேன். கருணை பொங்க என்னைப் பார்த்தார். அருகில் இழுத்து என்னை அணைத்துக்கொண்டு, ‘‘வேண்டான்டா நீ அங்கேயே இரு. ரொம்ப அருகில் வந்தால் என் குறை யெல்லாம் உனக்குத் தெரிய ஆரம் பித்து விடும்’’ என்றார். வியந்து போனேன்.

★ ★ ★ ★

(தொடரும்...)



# சம்பந்தன் ஐயாவின் தலைமையிலான
# தமிழரசுக் கட்சியாலேயே போராளிகளின் எண்ணங்களை நிறைவேற்ற முடியும்

மன்னார் நிருபர்:
வாஸ் கூஞ்ஞ

தேசியத் தலைவரின் தூரப்பார்வையிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு, அதன் பொறுப்பை மூத்த அரசியல்வாதியான சம்பந்தன் ஐயாவிடம் தேசியத் தலைவர் ஒப்படைத்தார் என்றால் அவரே இதற்குத் தகுதிவாய்ந்தவர் என அவரது எண்ணம் இருந்திருக்கலாம். இதனால் போராளிகளின் எண்ணங்களை நிவர்த்தி செய்யக்கூடிய இன்றைய தலைவர் சம்பந்தன் ஐயாவின் தமிழரசுக் கட்சியாலேயே முடியும் என்ற நம்பிக்கையுடன் நான் தமிழரசுக் கட்சியில் இணைந்துள்ளேன் என கடற் புலிகளின் மூத்த போராளியும் மேற்கு பிராந்திய புலனாய்வு செயற்பாட்டாளரு மான தம்பி என அழைக்கப்படும் தியாகராஜா அருட்செல்வம் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் போராளியான அருட்செல்வம் ஞாயிற்றுக்கிழமை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் முன்னிலையில் மன்னார் மாவட்ட தமிழரசுக் கட்சியின் தலைவர் திருச்செல்வம் பரஞ்சோதியிடம் தன்னை அடிப்படை தமிழரசுக் கட்சியின் அங்கத்தவராக இணைத்துக் கொள்ளும்படி மன்னார் தமிழரசுக் கட்சி காரியாலயத்தில் கடிதம் வழங்கி இணைந்து கொண்டார்.

தமிழரசுக் கட்சியுடன் இணைந்து கொண்ட பின்னர் 'காலைக்கதிர்' செய்தியாளரிடம் அவர் வழங்கிய செவ்வி வருமாறு:-

நான் எனது 17ஆவது வயதில் அதாவது, 1985ஆம்ஆண்டில்விடுதலைப்புலிப் படையில் சேர்ந்து 2008 ஆம் ஆண்டு வரைக்கும் அந்த அமைப்பிலே இருந்தேன். நான் இயக்கப்பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுது இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சென்ற வேளை அங்கு நாங்கள் கைது செய்யப்பட்டோம்.

2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட நான், 2012ஆம் ஆண்டு வரை அங்கு சிறைவாசம் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பின்னர் இலங்கையில் புதிய ஆட்சி உருவாகியதும் நான் இந்த எமது தாய் நாட்டுக்கு சட்ட ரீதியாக வருவதற்கு அரசுடன்தொடர்புகொண்டுகடந்த மார்ச் மாதம் திரும்பி வந்தேன்.

**கேள்வி:** இன்றைய சூழலில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் பிரச்சினைகள் தலை தூக்கியிருக்கும் இந் நேரத்தில் நீங்கள் தமிழரசுக் கட்சியில் இணைவதற்கான காரணம் என்ன?

**பதில்:** தமிழர்களின் அபிலாஷைகள் நிறைய இருக்கின்றன. இவைகளுக்கு உடனடியாகத் தீர்வுகள் பெறக்கூடிய விடயங்களாக இருக்குமா என்பது எனக்குத் தற்பொழுது புரியவில்லை. ஆனால், அரசியல் தீர்வுக்கு முன்னால் எமக்கு ஒரு கடமை இருக்கின்றது. அதாவது சுமார் முப்பது வருடங்களாக இந்தப் போராட்டம் ஆயுத முனையில் முன்னெடுக்கப்பட்ட போது சுமார் 52 ஆயிரம் இளைஞர்கள் போராட்டத்தில் வீரச்சாவு அடைந்துள்ளனர். இவர்களுக்கு நாம் குறிப்பிட்ட நாள்களில் வணக்கம் மரியாதை செய்வதில் பெரிய தடைகள் ஏற்பட்டு வருகின்றன.

## புதிதாக இணைந்து கொண்ட முன்னாள் போராளி நம்பிக்கை

இந்தத் தடை அரசால் மட்டுமல்ல, எமது உள்ளுக்குள் இருக்கும் சக்திகளாலும் இருந்து வருகின்றன. கடந்த மூன்று, நான்கு மாதங்களாக எனக்கு விசாரணைகள் இருந்தன. பின் கடந்த நான்கு, ஐந்து மாதங்களாக நான் இங்கு எமது மக்கள் எப்படி, என்ன சூழலில் வாழ்கின்றார்கள் என்பதை கவனித்து அறிந்து கொண்டேன்.

இந்த நிலையில் உடனடியாக இந்த மக்களுக்குச் செய்ய வேண்டியது என்னவென்று நோக்கும்போது முதலில் மாவீரர்கள் துயிலும் இல்லங்கள் இருக்கும் மோசமான நிலையைத் தெரிந்து கொண்டேன். இந்த மோசமான சூழ்நிலையை எவ்வாறு களைய வேண்டும் என்று சொன்னால் அது முன்னாள் போராளிகள் அல்லது தலைவர்களால் மட்டும் இயலாது. மாறாக எம் மத்தியில் இருக்கும் சரியான அரசியல் கட்சியாக இருக்க வேண்டும். அந்த கட்சியின் மூலம்தான் நாம் மாவீரர் துயிலும் இல்லங்களை மீட்க வேண்டிய நிலையும் இருக்கின்றது.

துயிலும் இல்லங்களை மீட்பது மட்டுமல்ல, சட்ட சிக்கலுக்கு உட்படாமல், இனங்களுக்கிடையே முரண்பாடு வராமல் இவற்றைப் புனரமைப்புச் செய்து; காலா காலமாக எமது மக்கள் போஷிக்க வேண்டிய இடமாக இருக்க வேண்டும். இது போராளிகளாக இருக்கலாம். அல்லது போராளிகளின் குடும்பங்களாக இருக்கலாம். ஏன் ஒட்டு மொத்தமாக அனைத்துத் தமிழ் மக்களுக்கும் இந்தக் கடமை இருக்கின்றது.

நாம் எல்லோரும் ஒன்றிணைந்து இதனைச் செயற்படுத்த வேண்டும். இதற்காகத்தான் நான் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து இவற்றை முன்னெடுக்க முடியும் என்ற நம்பிக்கையில் இணைந்து செயற்பட முனைகின்றேன்.

**கேள்வி:** யுத்தம் முடிவுற்று எட்டு வருடங்கள் நிறைவு பெறுகின்றபோதும் தமிழ் மக்களின் விடிவில் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான சம்பந்தன் எந்தளவில் உங்கள் எண்ணத்தை முன்னெடுப்பார் என்ற எண்ணத்துடன் நீங்கள் இருக்கின்றீர்கள்?



**பதில்:** தமிழரசுக் கட்சிகளுக்குள் சம்பந்தன் ஐயா மிகவும் அருமையானவர். அடுத்தது தமிழ்த் தேசியத் தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கி சம்பந்தன் ஐயாவைத் தலைவராக நியமித்தபோது இவர் திறம்பட செய்வார் என்ற நம்பிக்கையில்தான் அதனைச் செய்திருப்பார். உண்மையில் தேசியத் தலைவர், தான் எடுக்கின்ற ஒவ்வொரு முடிவும் தூரநோக்கு கொண்ட பார்வையாகவே இருக்கும். அந்த நோக்கில் சம்பந்தன் ஐயாவிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்திருப்பார் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

அதேசமயம், எங்களது முப்பது வருட காலத்தில் நாங்கள் ஆயுதப் போராட்டம் நடத்தியும் குறித்த இலக்கை அடைய முடியவில்லை. ஆனால், தற்போது தமிழரசுக் கட்சி சில காய் நகர்வுகளை நகர்த்திக் கொண்டிருக்கின்றது - இதனால் எமக்கு சாதகமான நிலை உருவாகும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சி) தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை முன்னெடுத்துச் செல்லுகின்றதா?

**பதில்:** ஐம்பது வருடங்களாக நாங்கள் எதிர்பார்த்திருந்த திட்டங்கள் இப்பொழுது சரிவராதுதான். ஆனால், இப்பொழுது எங்களுக்கு கிடைக்கின்றதை நழுவ விடாது பெற்றுக் கொண்டு அடுத்த கட்டத்தை நோக்கி நகர வேண்டும்.

**கேள்வி:** தமிழரசுக்கட்சியுடன் இணையும் நீங்கள் என்ன கோரிக்கைகள் முன்வைத்துள்ளீர்கள்?

**பதில்:** களத்தில் போராடியவர்களுக்குத்தான் எல்லா நிலைகளும் நன்கு புரியும். அரசியல் மட்டத்திலுள்ளவர்களுக்கு இவ்வாறான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால், நான் தமிழரசு கட்சியிடம் வேண்டியிருப்பது முன்னாள் போராளிகளை தமிழரசுக் கட்சி உள்வாங்க வேண்டும். அடுத்து மாவீரர் துயிலும் இல்லங்களில் எமது மக்கள் விரும்பிய நேரங்களில் அந்த இல்லங்களுக்குச் சென்று நினைவேந்தல்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது என்னுடைய கருத்து மட்டுமல்ல ஏனைய போராளிகளும் போராளிகளின் குடும்பங்களும் இவற்றையே எதிர்பார்த்து நிற்கின்றனர். இந்த எதிர்பார்ப்புக்களைச் சரியான முறையில் நகர்த்தக்கூடிய கட்சியென்று சொன்னால் அது தமிழரசுக் கட்சியால் மட்டுமே முடியும் என்பது எங்கள் நம்பிக்கையாகும். - என்றார். (இ-112)

# காரைதீவு பிரதேச சபைக்கு...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கட்சிகளின் நலன்களுக்கு அப்பால் ஊரின் நலன்களே எமக்கு முக்கியமானது என்கிற அடிப்படையில் இவ்விடயத்திலும் பெரும் அமுக்க குழுவாக காரைதீவு மகா சபை செயற்படும் என்பதில் மாற்றம் இல்லை.

**கேள்வி:** வடக்கு கிழக்கு இணைப்பு குறித்த விடயத்தில் உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:** வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தாயகமே ஒட்டுமொத்த தமிழ் மக்களின் அரசியல் அடையாளமாகவும், அபிலாஷையாகவும் இருந்து வருகின்றது. வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை அடைவதற்காகவே ஆயுத ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் தமிழ் மக்கள் கடந்த மூன்று தசாப்த காலத்துக்கும் மேலாக போராடி வந்திருக்கின்றனர். எத்தனையோ உயிர்கள் இந்த இலட்சிய தாகத்தை அடைவதற்காக ஆகுதிகள் ஆக்கப்பட்டன. நீதிமன்ற தீர்ப்பு ஒன்றின் மூலமாகவே வடக்கு, கிழக்கு தற்போது பிரிக்கப்பட்டு உள்ளது. ஆனால் இத் தீர்ப்பை வழங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழுவின் தலைவராகவும், பிரதம நீதியரசராகவும் விளங்கிய சரத் என். சில்வா பிழையான தீர்ப்பை வழங்கி விட்டார் என்று ஓய்வுபெற்ற பிற்பாடு பகிரங்கமாகவே தெரிவித்து கழிவிரக்கப்பட்டு உள்ளார்.

எனவே அரசாங்கம் இப்பிழையை திருத்தி சரி செய்ய வேண்டியது அவசியம் ஆகும். வடக்கு, கிழக்கு இணைப்பை அரசாங்கம் ஏற்படுத்தித் தருவதற்கு ஏனைய சமூகங்கள் இடையூறாக அமைதல் கூடாது. குறிப்பாக முஸ்லிம்கள் வடக்கு, கிழக்கு இணைப்புக்கு எதிரான முன்னெடுப்புகளையும், முயற்சிகளையும் கை விடுதல் வேண்டும்.

வடக்கு, கிழக்கு இணைப்பு ஊடாகவே தமிழ் - முஸ்லிம் உறவை நிரந்தரமாக கட்டி எழுப்ப முடியும் என்கிற யதார்த்தத்தை புரிந்து நடத்தல் வேண்டும். தமிழ் பேசும் மக்கள் சமயத்தால் வேறுபட்டு உள்ளனரே ஒழிய மொழியால் இணைக்கப்பட்டுள்ளனர் என்பதால் வடக்கு, கிழக்கு இணைப்பு ஊடாக இவர்களுக்கு எந்த அநியாயமும் நேரப் போவதே இல்லை. ஆகவே முஸ்லிம் அரசியல் கட்சிகள் வடக்கு, கிழக்கு இணைப்பு மூலமாக முஸ்லிம்களுக்கு தமிழர்களால் அநியாயம் இழைக்கப்பட்டு விடும் என்கிற பரப்புரைகளை கைவிட வேண்டும் என்றும் கேட்டு கொள்கின்றேன். (இ)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 1-30



# அழிஞ்சில்


**அழிஞ்சில்** (Alangium salvifolium)

அழிஞ்சில் தாவரம் இலங்கையில் பொதுவாக அணிஞ்சில் என அழைக்கப்படுகிறது. இத்தாவரம் கடும் வறட்சியைத் தாங்கி உலர் வலயத்தில் சிறப்பாக வளரக்கூடியது. நன்கு உயர்ந்து வளரக்கூடியது. இலைகள் எதிரொழுங்கில் காணப்படும். இலைகளின் நீளம் 5 – 14 செ.மீ. ஆகவும் அகலம் 2 – 2.5 செ.மீ ஆகவும் காணப்படுகிறது. இலை நீள்வட்ட வடிவமானது. கிளைகளில் சில இடங்களில் சிறுமுட்கள் காணப்படும். பூக்கள் 2 செ.மீ. நீளம் 1.5 செ.மீ. அகலம் உடையதாக காணப்படும். இவை தனித்தனியாக இலைகளின் கணுக்களில் இருந்து உருவாகும். இப்பூக்கள் வெளிறிய மஞ்சள் நிறமுடையவை. சிறிது நறுமணமுடையவை. இதன் பழங்கள் 2 x 1 செ.மீ. அளவான சிவப்புநிறமுடைய கோள வடிவானவை. இக்கனியினுள் ஒரு விதை மட்டும் காணப்படும்.

**பயிரிடும் முறை**

ஆழமான மண்ணில்லாப் பாறைப்பகுதிகளிலும் தரிசு நிலங்களிலும் வறட்சியை தாங்கி செழிப்பாக வளரக்கூடியது. இதனை சாலையோரங்களிலும் நடலாம். விதையைச் சேகரித்து நாற்று நட்டு வளர்ந்ததும் 5 மீற்றர் இடைவெளியில் மரங்களை நடலாம்.

**நடுகைக்குழி**




அரைப்பங்கு மேல்மண்ணும் அரைப்பங்கு கூட்டெருவும் இட்டு நடுகைக்குழியை நிரப்பவும்

அளவு – 60cm x 60cm x 60cm

**பயன்கள்**

1. இலை – கால்நடைத்தீவனமாக பயன்படுத்தப்படும், கூட்டெரு தயாரிக்கப் பயன்படும்

2. கனி – இதனை உண்ணலாம், விற்றமின்கள், கனியுப்புக்கள் நிறைந்தது.



3. விதை – விதைப் பருப்பிலிருந்து பெடுலீனிக்கமிலம், பெடுலீன் அல்டிகைட்டுபெடுலீன் மற்றும் லூபியால் ஆகியவை தனித்துப் பிரித்தெடுக்கப்படுகின்றன.

4. பூ – தேனீக்களுக்குத் தேவையாகும் தேனும், மகரந்தமும் இப் பூக்களில் உள்ளன. மார்ச் மாதத்தில் தேனீக்



களை இம்மரத்தில் அதிகம் காணலாம்

5. வேர்ப்பட்டை – நாட்டு வைத்தியத்திலே பல நஞ்சுகளுக்குப் பரிகாரமாக உபயோகிக்கப்படுகின்றது. ஆழிஞ்சில் வேர்ப்பட்டையை வெள்ளாட்டு நீரில் ஊறவைத்து உலர்த்திப் பொடியாக்கிக் கொடுத்தால் பூரான்கடி முதலிய நஞ்சுக்கள் நீங்கும்.

நாட்பட்ட கடி, பாம்புக்கடி, நஞ்சாலுண்டான தாமதம் ஆகியவற்றை நீக்கும் பண்பு வேர்ப்பட்டைக்கு உள்ளது.

பாம்புக்கடிக்கு வேர்ப்பொடி மிகவும் பிரசித்தி பெற்ற மருந்து என சென்ற நுற்றாண்டில் எழுதிய நூலில் ட்ருரி குறிப்பிட்டுள்ளார்.

பெருங்குடலில் உள்ள பூச்சிகள் கூட வேர்ப்பட்டை மருந்தால் வெளியேறிவிடும்.

கழு நீரில் வேர்ப்பட்டையை அரைத்து தேனுடன் உட்கொண்டால் வயிற்றுப் போக்கும் நீங்கும்.

மற்றும் கடுமையான கீழ் வாதத்திற்கு வேர்ப்பட்டைக் குழித் தைலத்தை மேலுக்குத் தடவலாம்.

பட்டைப் பொடியை மேகப்புண், சீழ் வடியும் பெருநோய், சொறி சிரங்கு ஆகியவற்றின் மேல் தூவி குணப்படுத்தலாம்.

இவற்றைத் தவிர மேகப்பிடிப்பு, மேகப்புடைகள், மேகவெடிப்பு ஆகியவற்றைக் குணப்படுத்தும் திறனும் பட்டைக்கு உள்ளது.

**குறிப்பு**

அணிஞ்சில் மரத்தின் மருத்துவப்பயன்கள் மற்றும் சிறப்பியல்புகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்களில் அணிஞ்சில் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

**தங்கராஜா கமலதீபன்**
பாடவிடய உத்தியோகத்தர்
பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பணிமனை
மன்னார்.

**இயற்கையைக் காப்போம் மரம் வளர்ப்போம்**

# 10 ஆயிரம் பேர் பங்கு பற்றிய மாவீரர் நாள் நிகழ்வுகள்










மாவீரர் நாள் நிகழ்வு லண்டனில் ஒழுங்கமைக்கப்பட்ட மண்டபத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். முற்பகல் 11.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின. பிற்பகல் 12.35 மணி அளவில் மாவீரர்களுக்கான சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வின் ஆரம்பமாக பொதுச்சுடரை திருமதி ஆனந்தி சூரியப் பிரகாசம் ஏற்றிவைத்தார்.

பிரித்தானிய தேசிய கொடியை இளையோர் அமைப்பு கிரிஷ் சபாபதி ஏற்றி வைத்தார். தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை அனைத்துலக செயலக பொறுப்பாளர் பொ. மகேஸ்வரன் ஏற்றி வைத்தார்.

ஈகச்சுடரை, நாதன் ஏற்றிய அதே நேரத்தில் கல்லறைகளுக்கு முன்பாக மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்த உறவுகள் தம் உறவுகளுக்காகச் சுடரேற்றினர்.

காலைக்கதிர்
Kalaikkathir



# நான் ஜெயலலிதா மகள் என்பது பன்னீர்செல்வத்துக்கும் தெரியும்

பெங்களூர்,நவ.29

நான் ஜெயலலிதாவின் மகள் என்பது தற்போது துணை முதலமைச்சராக உள்ள ஓ.பன்னீர்செல்வத்துக்கு முன்பே தெரியும் என பெங்களூர் பெண் அம்ருதா கூறியுள்ளார்.

பெங்களூரைச் சேர்ந்த அம்ருதா என்ற மஞ்சுளா என்பவர் நீதிமன்றில் ஒரு வழக்குத் தொடர்ந்தார். அதில் தன்னை, மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் மகள் என்று அறிவிக்க வேண்டும் என்றும் டி.என்.ஏ. பரிசோதனை நடத்த வேண்டும் என்றும் அவர் அந்த மனுவில் கூறியுள்ளார்.

அந்த மனுவை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.

இந்த நிலையில் அம்ருதா அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

நான் ஜெயலலிதாவின் மகள் என்பது கடந்த மார்ச் மாதம் தான் தெரியவந்தது. என் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதால் நான் மறைத்து வளர்க்கப்பட்டேன். ஜெயலலிதாவை என் பெரியம்மா என்று தான் நான் நினைத்திருந்தேன். ஆனால் அவர் தான் என் தாயார் என்று உறவினர்கள் கூறினர். கடந்த 1980ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 14ஆம் திகதி ஜெயலலிதாவின் மகளாகப் பெங்களூரில் பிறந்தேன்.




ஜெயலலிதாவின் அத்தையான ஜெயலட்சுமி தான் பிரசவம் பார்த்தார்.

எனக்கு அம்ருதா என்று பெயர் சூட்டினார்கள். என்னை உறவினர்கள் செல்லமாக மஞ்சுளா என்றுதான் அழைப்பார்கள். 3 மாதக் குழந்தையாக இருந்தபோதே ஜெயலலிதாவின் தாயார் சந்தியா எனது தாயார் சைலஜாவிடம் என்னைத் தத்துக்கொடுத்து விட்டார்.

எனது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று யாருக்கும் தெரியாமல் மறைத்து வளர்த்தனர். சைலஜாதான் என் தாயார் என்று நான் நினைத்துக் கொண்டு இருந்தேன். இதற்கு



முன்பு எனது தாயார் சைலஜா பல அ.தி.மு.க. பிரமுகர்களைச் சந்தித்து தான் (சைலஜா) ஜெயலலிதாவின் தங்கை என்று அவர்களிடம் கூறி இருக்கின்றார். ஆனால் யாரும் நம்பவில்லை.

என்னை வளர்த்த தந்தையும் கடந்த ஆண்டு இறந்து விட்டார். நான் ஜெயலலிதா மகள்என்பதைஅமெரிக்காவில் உள்ள என் உறவினர் ஜெயலட்சுமி, பெங்களூரில் உள்ள இன்னோர் உறவினர் லலிதா ஆகியோர் உறுதிப்படுத்தி விட்டனர். ஜெயலலிதா தான் என் தாய் என்பதை நிரூபிக்கவே டி.என்.ஏ. பரிசோதனை செய்யுமாறு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தேன். கர்நாடக உயர் நீதிமன்றில் முறையிடுமாறு கூறி விட்டனர். விரைவில் கர்நாடக உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்வேன். நான் ஜெயலலிதாவின் மகள் என்பது தற்போது துணை முதலமைச்சராகஉள்ளஓ.பன்னீர் செல்வத்துக்கும் தெரியும் என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜெயலலிதா பெயருக்கு அவப்பெயர் ஏற்படக்கூடாது என்பதற்காக அவர் உயிரோடு இருந்தவரை அவர் தான் என் தாய் என்று நான் கூறவில்லை. இப்போது அவர் என் தாய் என்பதைப் பகிரங்கமாகக் கூறுகிறேன். இதனால்தான் அவரது உடலை தோண்டி எடுத்து எனக்கும் அவருக்கும் டி.என்.ஏ. பரிசோதனை செய்ய வேண்டும் என்று மனு செய்தேன் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஜெயலலிதா மகள் என்று அம்ருதா சொல்வது பொய்

பெங்களூர்,நவ.29

ஜெயலலிதா மகள் என்று பெங்களூர் பெண் அம்ருதா கூறுகின்றமை பொய் எனத் தினகரன் ஆதரவாளர் புகழேந்தி கூறியுள்ளார்.

அம்ருதா என்ற பெண் தன்னை ஜெயலலிதாவின் மகள் என்று கூறி நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார். அவர் ஜெயலலிதாவின் மகள் கிடையாது. ஜெயலலிதாவை நாங்கள் மட்டும் அல்ல, கோடான கோடி தொண்டர்களும், பொதுமக்களும் அவரை அம்மா அம்மா என்று பாசத்தோடு அழைக்கிறார்கள்.

பல நலத்திட்ட உதவிகளைச் செய்து தமிழக மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்த அம்மா மீது களங்கம் ஏற்படுத்த அம்ருதா முயற்சிக்கிறார்.




அம்ருதாவழக்கில் எங்களையும் இணைத்துக் கொண்டு வாதாடுவோம். அவர் கூறியமை பொய் என்பதை நிரூபிப்போம். இவரது தாயார் சைலஜா கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு எனது வீட்டுக்கு அடிக்கடி வந்து ஜெயலலிதா எனது சகோதரி என்று கூறி வந்தார். அவருடைய சகோதரி என்பதற்கு என்ன ஆதாரம் உள்ளது என்று கேட்டபோது உறவினர்கள் கூறினர் என அவர் தெரிவித்தார்.

ஜெயலலிதாவுடன் எடுத்த ஒரு புகைப்படத்தையாவது ஆதாரமாகக் கொண்டு வாருங்கள் என்று கேட்டபோது அதுவும் இல்லை என்று கூறி விட்டார். அவர் இறந்த பிறகு அவரது மகள் அம்ருதா தற்போது ஜெயலலிதா எனது தாயார் என்று கூறி வருகிறார். இது ஓர் ஏமாற்று வேலை என்று தெரிவித்துள்ளார்.

## சசிகலா – தினகரன் சந்திப்பு



பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் உள்ள சசிகலாவைத் தினகரன் இன்று சந்திக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

திருச்சியில் நேற்றுமுன்தினம் நிர்வாகிகளுடன் தினகரன் ஆலோசனை நடத்தினார். அதன் பிறகு தகவல் தொழில்நுட்பப் பிரிவு நிர்வாகிகளுடன் நள்ளிரவு வரை ஆலோசனை நடத்தினார். இதனால் தினகரன் பெங்களூர் பயணத்தைத் தள்ளி வைத்திருந்தார். இந்த நிலையில் இன்று சசிகலாவைச் சிறையில் சந்தித்து ஆலோசனை நடத்திய பிறகு ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட முடிவு செய்து இருக்கிறார்.

## ஐதராபாத்தில் இவாங்கா



சர்வதேச தொழில் முனைவோர் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் மகள் இவாங்கா நேற்று அதிகாலை ஐதராபாத் வந்தடைந்தார்.

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் சர்வதேச தொழில் முனைவோர் மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டைப் பிரதமர் நரேந்திர மோடி ஆரம்பித்து வைக்கின்றார். இந்த மாநாட்டில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் மகள் இவாங்கா ட்ரம்ப் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உத்தரப் பிரதேசத்தில் விநோதம்: கழுதைகளுக்கும் சிறைவாசம்!

லக்னோ,நவ.29

உத்தரப்பிரதேசத்தில் அலங்காரச் செடிகளைத் தின்ற 8 கழுதைகள் 4 நாள் சிறைத் தண்டனை அனுபவித்த விசித்திர சம்பவம் நடந்துள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் ஜலான் மாவட்ட உராய் என்ற இடத்தில் சிறை ஒன்று உள்ளது. இங்கு ஜெயில் வளாகத்தில் 5 லட்சம் ரூபா செலவில் ஏராளமான அலங்காரச் செடிகள் வைக்கப்பட்டு இருந்தன.அந்தப் பகுதியில் சுற்றித்திரிந்த 8 கழுதைகள் சிறை வளாகத்துக்குள் நுழைந்து அங்கிருந்த அலங்காரச் செடிகளைத் தின்று விட்டன. இதனால் அதிர்ச்சி அடைந்த சிறை அதிகாரிகள் 8 கழுதைகளையும் பிடித்து சிறையில் அடைத்து வைத்துவிட்டனர்.

இந்தத் தகவலை அறிந்த அதன் உரிமையாளர், சிறை அதிகாரிகளைச் சந்தித்துக் கழுதைகளை விடுவிக்கக் கோரினர். ஆனால் அதிகாரிகள் மறுத்தமையால் உள்ளூர் அரசியல்வாதி ஒருவரு



டன் சென்று ஜெயில் அதிகாரிகளுடன் போராடி கழுதைகளை விடுவிக்க முயற்சிமேற்கொண்டார்.

அதற்கு அந்த அரசியல் பிரமுகர், என் வீட்டிலும் தான் கழுதைகள் மேய்ந்தன, எனவே விட்டு விடுங்கள் என்றார். இதைத் தொடர்ந்து 4 நாள்கள் சிறைவாசத்துக்குப் பின்பு 8 கழுதைகளும் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டன.

## காதலியைக் கரம் பிடிக்கும் பிரிட்டன் இளவரசர் ஹரி



லண்டன்,நவ.29

பிரிட்டன் இளவரசர் ஹரி தனது காதலியும் அமெரிக்க நடிகையுமான மேகன் மார்க்லேவை திருமணம் செய்து கொள்ள இருக்கிறார்.

பிரிட்டன் அரியணை வரிசையில் ஐந்தாவதாக அமரவுள்ளவர் இளவரசர் ஹரி. கடந்த 2016ஆம் ஆண்டில் இருந்து இளவரசர் ஹரியும், அமெரிக்க நடிகையான மேகன் மார்க்லேவும் காதலித்து வந்தனர். இந்த ஜோடி, இம்மாத ஆரம்பத்தில் நிச்சயம் செய்துகொண்டனர்.

ஹரி, அடுத்த இளவேனிற்காலத்தில் மார்க்லெலைத் திருமணம் செய்துகொண்டு, லண்டனில் உள்ள கன்சிங்டன் அரண்மனையில் உள்ள நட்டிங்ஹாம் மாளிகையில் அவரோடு வசிக்கவுள்ளார். இந்த நிச்சயத்தை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன் எனவும் மார்க்லேவின் பெற்றோரின் ஆசி தங்களுக்கு கிடைத்துள்ளது எனவும் ஓர் அறிக்கையில் ஹரி தெரிவித்துள்ளார்.

இவர்களது திருமண நாள் பற்றிய விவரங்கள் சிறிது காலத்திற்குப் பின்னர் அறிவிக்கப்படும் என்று வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ் மற்றும் அவரது இரண்டாவது மனைவியின் அதிகாரபூர்வ இல்லமான கிளாரன்ஸ் ஹவுஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## மக்களின் போராட்ட எதிரொலி: பாக்.சட்ட அமைச்சர் ராஜினாமா!

பதவிப் பிரமாணம் எடுக்கும் முறையில் மாற்றம் செய்ததைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாகிஸ்தானில் போராட்டங்கள் வெடித்துள்ளன. இந்த நிலையில், சட்ட அமைச்சர் ஜுஹித் ஹமீது தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

பாகிஸ்தானில் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள் பதவியேற்பில் சத்தியப் பிரமாணம் செய்யும்போது அதில் சில வரிகளை மாற்றிப் பிரமாணம் எடுக்கலாம் எனச் சட்டத்துறை அமைச்சர் ஜுஹித் ஹமீது சமீபத்தில் ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவர முயன்றார். இதற்குப் பாகிஸ்தானில் செயற்பட்டுவரும் சில இஸ்லாமிய அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்தன. மேலும் ஜுஹித் ஹமீது ராஜினாமா செய்ய வேண்டும் எனவும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் ஏற்பட்ட கலவரங்களில் 10 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 200இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகின. இதனால், பாகிஸ்தானில் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டதைப் போன்ற சூழல் உருவாகியுள்ளது.

இந்த நிலையில், மக்கள் போராட்டத்தின் எதிரொலியாகப் பாகிஸ்தான் சட்டத்துறை அமைச்சர் ஜஹீத் ஹமீது தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(ப)

# பக்தாத்தின் சந்தைப் பகுதியில் ஐ.எஸ். தற்கொலைத் தாக்குதல்

## 11 பேர் உடல் சிதறிப் பலி 31 பேர் காயம்









பக்தாத்,நவ.29

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள நஹ்ரவான் சந்தைப்பகுதியில் இரண்டு ஐ.எஸ். தற்கொலைப் படைத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 11 பேர் உயிரிழந்தனர்.

ஈராக் நாட்டில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும், ஈராக் இராணுவத்தினருக்கும் இடையே அடிக்கடி சண்டை நடைபெற்று வருகின்றது. இந்தத் தாக்குதலில் பல அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்து வருகின்றனர்.

இந்த நிலையில், ஈராக் தலைநகரான பக்தாத்தில் இருந்து தென்கிழக்குத் திசையில் 35 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள நஹ்ரவான் சந்தையில் நேற்றுக் காலை ஐந்து தீவிரவாதிகள் நுழைந்தனர். இதையறிந்த பொலிஸார் நடத்திய தாக்குதலில் மூன்று தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இருப்பினும் இரண்டு தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தனர். இந்தத் தாக்குதலில் 11 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்; சுமார் 31 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தத் தாக்குதலில் பலியானவர்கள் அனைவரும் பொதுமக்கள் என இராணுவம் தரப்பில் கூறப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலையடுத்து அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

11 அப்பாவிப் பொதுமக்களின் உயிரைப்பறித்த இந்தக் கொலை வெறித் தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

(ப)

## பிரபஞ்ச அழகியாக டெமி லெய் தேர்வு!

லொஸ்வேகாஸ்,நவ.29

பிரபஞ்ச அழகியாக தென்னாபிரிக்க நாட்டின் 22 வயது டெமி லெய் நீல் பீட்டர்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் லொஸ்வேகாஸ் நகரில் 66ஆவது பிரபஞ்ச அழகிப் போட்டி(மிஸ் யுனிவர்ஸ்) நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றது. இதில் 92 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் கலந்து கொண்டனர்.

பல்வேறு சுற்றுகளைக் கொண்ட இந்தப் போட்டியின் இறுதிச் சுற்றுக்கு 22 வயது தென்னாபிரிக்கா அழகி டெமி லெய் நீல் பீட்டர்ஸ், ஜமைக்காவின் டேவினா பென்னட்(22), கொலம்பியா நாட்டின் லாரா கேன்சலெஸ்(21) தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த மரியா போனெர்ட்லாப், வெனிசுலாவின் கெய்சி சயாகோ ஆகிய 5 அழகிகள் முன்னேறினர்.

கேள்விக் கணைகளால் துளைத்தெடுக்கப்பட்ட விறுவிறுப்பான இறுதிச்சுற்றில் தென்னாபிரிக்காவின் டெமி லெய் சாமர்த்தியமாகப் பதில் அளித்துப் பிரபஞ்ச அழகிப் பட்டத்தை தட்டிச் சென்றார். இவர், வர்த்தக மேலாண்மை படிப்பில் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.







### பங்களாதேஷில் 2009ஆம் ஆண்டின் கலகம்:

## 139 பேரின் மரண தண்டனையை உறுதிப்படுத்தியது உயர் நீதிமன்றம்

பங்களாதேஷ் நாட்டில் கடந்த 2009ஆம் ஆண்டு ஆட்சிக்கு எதிராக நடந்த கலகம் தொடர்பாக 139 பேருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை மற்றும் 146 பேரின் ஆயுள் தண்டனையை உறுதிப்படுத்தி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பங்களாதேஷ் நாட்டில் கடந்த 25-2-2009 அன்று அந்நாட்டின் ஆயுதப் படை வீரர்கள் பில்கானாப் பகுதியில் உள்ள தலைமை அலுவலகத்தில் கலகத்தில் ஈடுபட்டனர். இருதரப்பு மோதலில் இராணுவ உயரதிகாரிகள் 57 பேர் உட்பட 74 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். அரசு நடத்திய சமரசப் பேச்சின் எதிரொலியாகக் கலகத்தில் ஈடுபட்ட வீரர்கள் ஆயுதங்களைத் துறந்து சரணடைந்தனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாகக் கொலை, கொள்ளை, பொதுச் சொத்தைச் சூறையாடுதல், அரசுக்கு எதிராகக் கலகம் விளைவித்தல் எனப் பல்வேறு குற்றப்பிரிவுகளின் கீழ் 58 தனி வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

வழக்கை விசாரித்த டாக்கா நீதிமன்றம் 152 பேருக்கு மரண தண்டனையும், 423 பேருக்கு ஆயுள் உள்ளிட்ட சிறைத் தண்டனையும் விதித்து கடந்த 2013ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது. குற்றஞ்சாட்டப்பட்ட 277 பேர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து டாக்கா நகரில் உள்ள உயர்நீதிமன்றத்தின் மூன்றுநபர் அமர்வில் மேன்முறையீடு செய்யப்பட்டது. இவ்வழக்கின் விசாரணை நிறைவடைந்து நேற்றுமுன்தினம் தீர்ப்பு வாசிக்கப்பட்டது.

நீதிமன்றம் அளித்த தீர்ப் பின்படி 139 பேருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை மற்றும் 146 பேரின் ஆயுள் தண்டனையை உயர் நீதிமன்ற அமர்வு உறுதிப்படுத்தித் தீர்ப்பளித்துள்ளது.

# மெஸ்ஸியின் கோல் தவறா?




மெஸ்ஸியின் அழகான கோலை நடுவர் மறுத்தமையால், லா லிகா வில் வலென்சியாவிற்கு எதிரான ஆட்டத்தை பார்சிலோனா 1:1 எனச் சமநிலை செய்தது.

லா லிகா உதைபந்து லீக் தொடரில் நேற்றுமுன்தின ஆட்டம் ஒன்றில் முன்னணி அணியான பார்சிலோனா வலென்சியாவை எதிர்கொண்டது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் பார்சிலோனாவின் நட்சத்திர வீரர் மெஸ்ஸி கோல் எல்லையை நோக்கிப் பந்தை உதைத்தார். அந்தப் பந்தை வலென்சியா கோல் காப்பாளர் தடுத்தார். ஆனால், பந்து அவரது கையில் பட்டு கோல் எல்லைக்குள் புகுந்தது. கோல் எல்லைக் கோட்டைத் தாண்டிய போது. கோல் காப்பாளர் அந்தப் பந்தை வெளியில் தள்ளிவிட்டார்.

அதுகோல்தான் என்பது ரி.வி.யில் பார்த்த கோடிக்கணக்கான ரசிகர்களுக்குத் தெரிந்தது. ஆனால், நடுவர் கோல் கொடுக்க மறுத்து விட்டார். இதனால் மெஸ்ஸி உட்படப் பார்சிலோனா வீரர்கள் விரக்தியடைந்தனர்.

பின்னர் 60ஆவது நிமிடத்தில் வலென்சியா வீரர் ரேட்ரிகோ முதல் கோலைப் பதிவு செய்தார். இதற்குப் பதில் கோலாக 82ஆவது நிமிடத்தில் ஜோர்டி அல்பா கோல் அடிக்க ஆட்டம் 1:1 எனச் சமநிலையில் முடிந்தது. மெஸ்ஸி அடித்த பந்து கோல் என அனுமதி அளித்திருந்தால் பார்சிலோனா 2:1 என வெற்றி பெற்றிருக்கும்.

வலென்சியாவிற்கு எதிரான போட்டி சமநிலை ஆனதால் லா லிகா புள்ளிகள் பட்டியலில் 2 புள்ளிகள் இழந்து 13 போட்டியில் 11 வெற்றி இரண்டு சமநிலை மூலம் 35 புள்ளிகள் பெற்று பார்சிலோனா முதல் இடத்தைப் பிடித்துள்ளது. வலென்சியா 13 போட்டியில் 9 வெற்றி, 4 சமநிலை உடன் 31 புள்ளிகள் பெற்று 2ஆவது இடத்தில் உள்ளது.

# ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசை: 2ஆவது இடத்தில் புஜாரா!

ஐ.சி.சி. டெஸ்ட் கிரிக்கெட் துடுப்பாட்ட தரவரிசையில் இந்திய அணி வீரர் புஜாரா 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். நாக்பூர் டெஸ்ட் போட்டியில் புஜாரா 14 பவுண்டரிகளுடன் 143 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். இதையடுத்து தரவரிசையில் முன்னேற்றம் கண்டுள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் ஆஸ்திரேலியாவின் ஸ்டீவன் ஸ்மித் முதலிடத்தில் நீடிக்கிறார். சமீபத்தில் நடந்துமுடிந்த ஆஷஸ் முதல் டெஸ்ட் போட்டியில், கப்டன் ஸ்டீவ் ஸ்மித் 141 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

941 புள்ளிகளுடன் ஐ.சி.சி. தரவரிசையில் இதுவரை அதிக புள்ளிகள் எடுத்த வீரர்களின் பட்டியலில் பீட்டர் மேயுடன் இணைந்து 5ஆம் இடம் பிடித்துள்ளார் ஸ்மித். இதற்கு முன்பு பிரட்மான் (961), லென் ஹட்டன் (945), ஜேக் ஹாப்ஸ் (942), ரிக்கி பொண்டிங் (942), பீட்டர் மே (941) ஆகியோர் அதிக புள்ளிகள் பெற்ற வீரர்களாகவுள்ளனர்.

இங்கிலாந்தின் ஜோ ரூட் மூன்றாவது இடத்திலும், நியூஸிலாந்தின் கேன் வில்லியம்சன் 4ஆவது இடத்திலும் இந்தியாவின் விராட் கோஹ்லி 5ஆம் இடத்திலும் உள்ளார்கள்.

ஐ.சி.சி. டெஸ்ட் கிரிக்கெட் பந்துவீச்சாளர் தரவரிசையில் ஜேம்ஸ் அண்டர்சன் முதலிடத்தில் உள்ளார். அடுத்த நான்கு இடங்களில் ஜடேஜா, ரபடா, அஸ்வின், ஹேரத் ஆகியோர் உள்ளார்கள்.



# மோசமான தோல்வியில் முதல் இடத்தில் இலங்கை



நாக்பூர் டெஸ்டில் தோல்வியடைந்தது இலங்கை அணியின் 100ஆவது தோல்வியாகும். இந்தத் தோல்வியை இலங்கை மிகவும் அதிக அளவான வித்தியாசத்தில் பதிவு செய்துள்ளது.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நாக்பூரில் நடைபெற்றது. கடந்த 24 ஆம் திகதி தொடங்கிய இந்தப் போட்டி 4ஆவது நாளுடன் முடிவுக்கு வந்தது.

முதலில் துடுப்பாட்டம் செய்த இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 205 ஓட்டங்களுடன் சுருண்டது. துடுப்பாட்டம் செய்யச் சாதகமான ஆடுகளத்தில் இந்தியப் பந்து வீச்சாளர்கள் சிறப்பாகப் பந்து வீசினார்கள். அஸ்வின் நான்கு விக்கெட்டுக்களும், இசாந்த் சர்மா மற்றும் ஜடேஜா ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களும் வீழ்த்தினார்கள்.

பின்னர் இந்தியா முதல் இன்னிங்ஸைத் தொடங்கியது. முரளி விஜய் (128), புஜாரா (143), விராட் கோஹ்லி (213), ரோகித் சர்மா (102) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 6 விக்கெட் இழப்பிற்கு 610 ஓட்டங்கள் குவித்து இந்தியா முதல் இன்னிங்ஸை டிக்ளேர் செய்தது.

பின்னர் 405ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இலங்கை 2ஆவது இன்னிங்ஸைத் தொடங்கியது. அஸ்வின் (4), இசாந்த் சர்மா (2), ஜடேஜா (2), உமேஷ் யாதவ் (2) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் இலங்கை 166ஓட்டங்களில் சுருண்டது.

இதனால் இந்தியா இன்னிங்ஸ் மற்றும் 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்தத் தோல்வி இலங்கை அணிக்கு டெஸ்ட் போட்டியில் 100 ஆவது தோல்வியாகும். 100ஆவது தோல்வியை மிகவும் மோசமான வகையில் பதிவு செய்துள்ளது.

இதற்கு முன் இலங்கை அணி கடந்த 2001ஆம் ஆண்டு கேப் டவுனில் நடைபெற்ற டெஸ்டில் தென்னாபிரிக்காவிற்கு எதிராக இலங்கை அணி இன்னிங்ஸ் மற்றும் 229 ஓட்டங்களில் தோல்வியடைந்ததே மோசமான தோல்வியாக இருந்தது.

தற்போது நாக்பூரில் இன்னிங்ஸ் மற்றும் 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்து மோசமான தோல்வியில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

அதேவேளையில் இந்த வெற்றியின் மூலம் இந்தியா அதிக வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பெருமையைப் பெற்றுள்ளது.

**Worst defeats for SL in Tests**

| Margin | Toss | Opp | Venue | Year |
|---|---|---|---|---|
| Inns & 239 runs | won | Ind | Nagpur | 2017 |
| Inns & 229 runs | won | SA | Cape Town | 2001 |
| Inns & 208 runs | won | SA | Colombo | 1993 |
| Inns & 201 runs | won | Aus | Melbourne | 2012 |
| Inns & 175 runs | won | Pak | Dhaka | 1999 |
| Inns & 171 runs | lost | Ind | Pallekele | 2017 |

ESPN cricinfo

# மாவீரர் வெற்றிக் கிண்ணம் - 2017






மாற்றத்திற்கான இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாவீரர் வெற்றிக் கிண்ணகிரிக்கெட் போட்டியில்உடையார்கட்டு நண்பர்கள் அணி மகுடம் சூடியது.

மாற்றத்திற்கான இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டாளர்களான யோ.சுதர்சன்,ஆ.ஜோன்சன், சி.பிரதீபன் ஆகியோரின் தலைமையில் கடந்த சனி,ஞாயிற்றுக்கிழமை வரை நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தில் நடைபெற்றது. இந்தத் துடுப்பாட்டத் தொடரில் 14 அணிகள் கலந்துகொண்டன.

இறுதி ஆட்டம் ஞாயிற்றுக்கிழமை 9:30 மணியளவில் நடைபெற்றது.இதில் நண்பர்கள் அணியும் சுதந்திரபுர மத்திய அணியும் மோதியது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நண்பர்கள் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 4 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் காந்தன் 50 ஓட்டங்களையும் சுயன் 7 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சுதன், ஜின்னா, டில்றுக்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளைக் கைப்பற்றியமையுடன், தொடர்ந்து ஆடிய சுதந்திரபுரம் மத்திய அணியினர் ஆறு இலக்குகளை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்று 9 ஓட்டங் களால் தோல்வியடைந்தனர்.

வெற்றிபெற்ற அணிக்கான மாவீரர் கிண்ணத்தை வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் வழங்கி வைத்தார். இரண்டாம் இடம் பெற்ற அணியினருக்கான கிண்ணத்தை மாற்றத்திற்கான இளைஞர் அமைப்பின் ஆலோசகர் என்.விஷ்ணுகாந்தன் வழங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

## முல்லையில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைக்க ஒரு கோடி ரூபா நிதி ஒதுக்கீடு!

முல்லைத்தீவு மாவட்ட உள்ளக விளையாட்டு அரங்கம் அமைக்க வடமாகாண விளையாட்டுத்திணைக் களத்தால் ஒரு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முல்லை மாவட்டத்தில் உள்ளக விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு வடமாகாண விளையாட்டுத்திணைக் களத்தால் 2018ஆம் ஆண்டு ஒரு கோடி ரூபா மாகாண உடகட்டுமான நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுளளது. வருகின்ற 2018 தை மாதம் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே முல்லை மாவட்டச் செயலகத்தின் முன்பாக நகர விளையாட்டு மைதானத்தின் அருகில் விளையாட்டுத்திணைக்களத்திற்குப் பிரதேச செயலகத்தால் காணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்தக் காணியிலேயே பூப்பந்து மற்றும் கரப்பந்து, கபடி, கராத்தே, குத்துச் சண்டை போன்ற போட்டிகள் நடத்தக் கூடியதாகவும் பயிற்சிகளை மேற்கொள்ள கூடிய வகையிலும் இவ் உள்ளக விளையாட்டு அரங்கம் அமையவுள்ளது.

ஏற்கனவே கடந்த காலத்தில் 2013ஆம் ஆண்டில் 33 கோடி ரூபா உள்ளக விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு மத்திய அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிலையில் ஒரு கோடி ரூபா செலவில் உள்ளக விளையாட்டு அரங்கு வேலைகள் ஆரம்பிக்கப்பட ஏற்பாடாகி இருந்த நிலையில் இடையூறுகள், கால தாமதம் காரணமாக மன்னார் மாவட்ட உள்ளக விளையாட்டு அரங்கிற்கு நிதியுதவி மாற்றம் செய்யப்பட்டது.

மீண்டும் விடா முயற்சி காரணமாக மாகாணவிளையாட்டுத்திணைக்களத்தால் 2018ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட ஏற்பாடாகி வருகின்றன. இவ் உள்ளக விளையாட்டு அரங்கம் அமைப்பதன் மூலம் மாவட்டத்தின் உள்ளக விளையாட்டு அரங்கம் இல்லை என்ற குறையை நீக்குவதுடன் பாடசாலை மற்றும் கழக வீரர்களுக்கான போட்டி நடத்துவதுடன் பயிற்சியையும் பெற முடியும். (ப -81)

## டெஸ்டில் 300 அல்ல 600




டெஸ்டில் 600 விக்கெட்டுகளைக் கைப்பற்றுவதே எனது இலக்காகும் என இந்திய சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் கூறியுள்ளார்.

டெஸ்டில் 300 விக்கெட்டுகளை அதிவேகத்தில் கைப்பற்றி உலக சாதனை படைத்த தமிழக வீரர் அஸ்வின் நிருபர்களிடம் கூறியவை வருமாறு-

300 விக்கெட்டுகளை இரண்டு மடங்காக மாற்ற முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. 600 விக்கெட்டுகளைக் கைப்பற்றுவதே எனது இலக்காகும். இதுவரை 54 டெஸ்டுகளில் விளையாடியுள்ளேன்.

சுழற்பந்து வீச்சு எளிதானது அல்ல. தற்போது வீரநடைபோல் எழுந்து இருப்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் அதற்குப் பின்னால் நிறைய இருக்கிறது. நானும், ஜடேஜாவும் அதிகமான ஓவர்கள் வீசினோம். இதனால் விக்கெட்டுக்களை எடுப்பதற்கு உதவியாக இருந்தது என்று தெரிவித்துள்ளார்.

## அரச அலுவலகங்கள்...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் அலுவலர்கள் யாவரும்.எமது அமைச்சின் அலுவலர்களே இங்கு இப்போது பிரசன்னமாய் இருக்கின்றார்கள்.எனினும், வட மாகாண சுகாதார அமைச்சின் அலுவலர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

அதற்கடுத்து பிரதிப் பிரதம செயலாளர் அலுவலக நிதிப் பிரிவின் அலுவலர்கள்.

நான்காவதாகச் சுகாதார திணைக்கள அலுவலர்கள். ஐந்தாவது நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலர்கள். ஆறாவதாக கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரத் திணைக்கள அலுவலர்கள் ஏழாவதாக வீதி அபிவிருத்தித் திணைக்கள அலுவலர்கள் ஆகிய அனைவரும் பாராட்டுக்கு உரியவர்கள்.

அதேபோன்று நிதிமுகாமைத்துவத்தில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்று பாராட்டுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்ட நல்லூர் பிரதேச சபை, வவுனியா (தெற்கு) பிரதேச சபை, மன்னார் பிரதேச சபை, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேசசபை ஆகிய ஐந்து பிரதேச சபைகளுக்கும் எமது பாராட்டுக்கள் உரித்தாகுக.

வடமாகாணத்தின் அமைச்சுக்கள்,திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்களில் 2015 ஆம் ஆண்டில் நிதி நடவடிக்கைகளின் அதியுயர் செயலாற்றுகைகளை திறமையாக மேற்கொண்ட அவ்வத் திணைக்களங்களின் அமைச்சுக்களின் தலைவர்கள், கணக்காளர்கள் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்களையும் பாராட்டிக் கௌரவிப்பதுடன் இவர்களின் முன்மாதிரியில் இனிவரும் காலங்களிலும் இதுபோன்ற சிறந்த நிதி முகாமைத்துவத்தைப் பேணி மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் பொதுமக் களுக்கு சிறப்பான சேவைகளை வழங்கு வதற்கும் அனைத்து அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களும் கடுமையாகவும் நேர்மையாகவும் உழைக்க வேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு, அதியுயர்செயலாற்றுகையை வெளிப்படுத்திய எல்லா நிறுவனங் களுக்கும் மீண்டும் ஒரு முறை எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன். (க)

## அரசாங்க அறிவித்தல்

## கேள்வி அறிவித்தல் - 2018

யாழ் மாவட்ட செயலகத்தால் பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

1. செயலக சுத்திகரிப்புச் சேவை (மலசலகூடம் மற்றும் சுற்றுப்புறம்)
2. புகைப்படப்பிரதி இயந்திர (Photo Copy Machine) பராமரிப்பு
3. உள்ளகத் தொலைபேசித் தொகுதி பராமரிப்பு
4. வாகன சுத்திகரிப்புச் சேவை
5. செயலக பாதுகாப்புச் சேவை
6. வளிபதனாக்கிகள் பராமரிப்புச் சேவை

மேற்படி விடயம் தொடர்பான மேலதிக தகவல்களையும், விண்ணப்பப்படிவத்தினையும் செயலக பெறுகைகள் அலகில் 2017.11.29 ஆம் திகதியிலிருந்து 13.12.2017 ஆம் திகதிவரை அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 500.00 உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000.00 உம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக்கொண்ட விவரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ரூபா 5000.00 செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியுடன், "தலைவர், பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரியிட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்ட சேவையினுடைய விவரத்தினை குறிப்பிட்டு 2017.12.14 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக செயலக நிதிக்கிளையிலுள்ள கேள்விப்பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினம் மு.ப 11.00 மணிக்குத் திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

**நா.வேதநாயகன்,**
**மாவட்ட செயலாளர்,**
**யாழ் மாவட்டம்.**

## எயிட்ஸ்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி) இது தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பாலியல் நோய் தடுப்புப் பிரிவு மருத்துவ நிபுணர் பிரியந்த பட்டெகல்ல தெரிவித்தவை வருமாறு:-

உலகம் முழுவதும் அச்சுறுத்தல் விடுத்துக் கொண்டிருக்கும் நோய்க் காரணியான எச்.ஐ.வி. நோய்த் தொற்று இலங்கையிலும் காணப்படுகின்றது. இந்த நோய்த்தொற்றுத் தாக்கமானது வருடத்துக்கு 250 பேர்என்றகணக்கில்நாட்டில்அதிகரித்து செல்வதாகச் சுகாதாரத் துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் எச்.ஐ.வி. நோய்த் தொற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்தவும்அதுதொடர்பான விழிப்புணர்வுகளைமக்கள்மத்தியில் ஏற்படுத்தவும் இந்த விழிப்புணர்வு நடைபவனி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது – என்றார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் முகப்பிலிருந்து இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் நடைபவனி, ஹற்றன் நஷனல்வங்கிவீதி–விக்ரோரியா வீதியூடாகச் சென்று மீண்டும் வைத்தியசாலை வீதியூடாக யாழ்.போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் முடிவடையவுள்ளது. அதனைத் தொடர்ந்து தாதியர் பயிற்சிக் கல்லூரியில் எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

## ஈழ...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி) ளனர்.

தமிழகத்தில் உள்ள பல்வேறு முகாம்களில் இலங்கைத்தமிழர்கள்வாழ்ந்துவருகின்றனர். இந்த முகாம்களில் உள்ள சிலர் தங்களது உறவினர்களைப் பார்க்க இராமேஸ்வரத்தில் இருந்து படகுகள் மூலம் இலங்கைக்குச் சென்று விடுகின்றனர்.

இந்த நிலையில், தூத்துக்குடி மாவட்டம் தாப்பாத்தி ஈழத் தமிழர்கள்முகாமில்இருந்துஒரே குடும்பத்தைச் சேர்ந்த பிரியந்தி (வயது -32), பரமநாதன் (வயது -37), மற்றொரு பரமநாதன் (வயது – 41) உள்ளிட்ட 4 பேர், 5 குழந்தைகள் என 9 பேர் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்பு தனுஷ்கோடி அரிச்சல்முனையில் இருந்து படகு மூலம் இலங்கைச் சென்றுள்ளனர்.

இதையடுத்து, 9 பேரையும் இலங்கைக்குஅழைத்துச்சென்ற படகு,முகவர்கள்குறித்துஉளவுத் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாவகச்சேரி...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி) நாயக கட்சி கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் நேற்றுச் செலுத்தப்பட்டது.

சட்ட ரீதியான சிக்கல்களை எதிர்கொள்ளாத சாவகச்சேரி நகர சபைஉள்ளிட்ட93உள்ளூராட்சி சபைகளுக்கானதேர்தல்களுக்கு வேட்புமனுக்களைக் கோருமாறு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலகர்களுக்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று முன்தினம் அறிவித்தல் விடுத்திருந்தது.

இதற்கமைவாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட மேலதிக நிர்வாகச் செயலாளர் ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தலைமையிலான கட்சியின் முக்கியஸ்தர்கள் இந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

## யாழ்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி) வினர் பஸ் சேவையில் ஈடுபட்டதால் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் குழப்ப நிலை ஏற்பட்டது.

இதனை அடுத்து போராட்டத்தை ஏற்பாடு செய்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஐவருக்கு எதிராகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

வடபிராந்திய தொழிற்சங்கத்தின் தீர்மானத்துக்கு மாறாகப் பருத்தித்துறை டிப்போ பொறுப்பாளரின்பணிப்பில்அந்தடிப்போ பஸ்கள் நேற்றுக் காலை சேவையில் ஈடுபட்டன.

இதனால் தொழிற்சங்கத்தினருக்கும்பருத்தித்துறைடிப்போ பஸ் சாரதி, நடத்துனருக்கும் இடையே நேற்று காலை யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையத்தில் முறுகல் நிலை ஏற்பட்டது. எனினும் பொலிஸார் தலையிட்டு அதனை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து, வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்கப் போராட்டத்தை ஒழுங்கமைத்தனர் என 5 பேருக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று நண்பகல் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையப் பொறுப்பாளர் எஸ். கனகராஜா இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்கம் சட்டத்துக்கு மாறாகப் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்தை ஒழுங்கமைத்த தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டாளர்கள் ஐந்து பேருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முறைப்பாட்டாளர் கோரியுள்ளார்.

## பிரபாகரனின்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி) கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் தடை செய்யப்பட்ட இயக்கமே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு. இந்த நிலையில் 26ஆம் திகதி பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் வடக்கில் இடம்பெற்றுள்ளன.

பிரபாகரனின் வீட்டுக்கு முன்னால் கேக் வெட்டியமை, பிரபாகரனின் புகைப்படம் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டமை மற்றும் நள்ளிரவில் பிறந்தநாள் கொண்டாடியவர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர்இந்தவிசாரணைகளை முன்னெடுப்பர்.

மேலும், பிரபாகரனின் புகைப் படங்களைப்பயன்படுத்திமாவீரர் தினத்தை அனுஷ்டித்தவர்களையும் கைது செய்வதற்கான ஏற்பாடுகளைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர். இதுபோன்ற செயற்பாடுகள் சட்டவிரோதமானவை – என்றார்.

## இலங்கையிலிருந்து....

(முதலாம்பக்கத் தொடர்ச்சி) சுங்க அதிகாரிகளாலும் அவர்கள் இருவரும் தனித்தனியே கைதுசெய்யப்பட்டனர்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் மேற்படி தங்கத்தை இலங்கையில் இருந்து கடத்திய வர்களிடமிருந்து பெற்று, தோணியில் இருந்து சென்னைக்கு கொண்டு செல்ல முயற்சித்தனர் எனக் கூறப்படுகிறது. (உ)

## முதல்வர்....

(முதலாம்பக்கத் தொடர்ச்சி) –இவ்வாறு நேற்று முன்தினம் மாவீரர் தினத்தை ஒட்டி தமிழ் மக்கள் மத்தியில் பீறிட்டு எழுந்த நினைவேந்தல் எழுச்சி குறித்து கணிப்பீடு செய்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

ஞாயிறன்று மாவீர் நாள் மக்கள்எழுச்சிநிகழ்ச்சிபற்றியசெய்தியாளர்கேள்விக்குப்பதிலளிக்கையிலேயேஅவர்இப்படிக் கணிப்பீடு செய்தார்எனஅவரது அலுவலகச் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

மாவீரர் தின எழுச்சி நிகழ்ச்சிகள் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை எனஅச்செய்திக் குறிப்பில் கூறப்பட்டவை வருமாறு:-

மக்கள் தங்களை உணரத் தொடங்கிவிட்டார்கள். தங்கள் சக்தியை உணரத்தொடங்கிவிட்டார்கள். தங்கள் உரித்துக்கள் என்ன என்பதையும் உணரத் தொடங்கிவிட்டார்கள் என்று கருதுகின்றேன்.

ஞாயிறு நிகழ்ச்சிகள் துயிலும் இல்லங்களில்மட்டும்நடைபெறவில்லை. கோயில்களில், குடும்ப இல்லங்களில் எல்லாம் தீபச்சுடர் ஏற்றி எமது விடுதலை வீரர்களுக்குவீரவணக்கம்தெரிவித்துள்ளார்கள்எம்மக்கள். நல்லாட்சி கொண்டுவந்த அரசாங்கத்தால் வல்லாட்சியின் வசம் திரும்பமுடியாததால்முன்னைய அரசாங்க காலத்தில் இருந்த கெடுபிடிகள் குறைந்திருந்தன.

எமது மாவீரர்களை மலினப்படுத்துவதே மக்களின் மனோநிலைஎன்றிருந்தால்இவ்வளவு எழுச்சியைக் காட்டியிருக்கமாட்டார்கள்எம் மக்கள். முன்னைய வருடங்களிலும் பார்க்க உணர்வலை இவ்வருடம் கூடியதற்கான காரணங்கள் இரண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஒன்று உள்ளேயிருந்த உணர்ச்சிகளை இது காறும் எம் மக்கள் தடைபோட்டு வைத்திருந்தார்கள். அவ்வாறு தடை போடத் தேவையில்லை என்றவாறு அரசியல் நிலைமாற்றம் அடைந்ததும் தமது உணர்ச்சிகளைஊர்அறியஉலகறியமக்கள் வெளிக்காட்டியுள்ளார்கள்.

மற்றைய காரணம் – எம் மக்களிடையே ஒரு பயம் பிறந்துவிட்டது என்று கருதுகின்றேன். விடுதலை வீரர்கள் வலம் வந்த காலத்தில் ஈழத்தை விட எல்லாமும் தருவோம் என்ற சிங்கள அரசியல்வாதிகள் இன்றுசொற்களால் எமக்கு சுகம் தரலாம் என்று எண்ணுவதைப் பார்த்து இவ்வளவுதான் கிடைக்குமா, எமதுஅபிலாஷைகள், அடிப்படை வேண்டுதல்கள்நிறைவேறாதா என்ற பயம் பீடிக்க அன்று இருந்த நிலையை எண்ணி, அப்போதைய அதிகாரங்களை எண்ணி, அன்றைய விடுதலை வீரர்களை எண்ணி, தமது மரியாதைகளை, மாண்பை தன்னெழுச்சியாகத் தெரிவிக்கத் திரண்டனர்மக்கள்என்றுகொள்ளக்கூடியதாக இருக்கின் றது. எங்கே எமது தலைவர்கள் விலைபோய்விடுவார்களோ மற்றும் அரைகுறைத் தீர்வைத் தம்மீதுதிணித்துவிடுவார்களோ என்றுஎண்ணிஅஞ்சிவிடுதலை வீரர்களின் நினைவேந்தலில் மனநிறைவுகாணஎத்தனித்துள்ளார்கள். கொள்கைகளில் உறுதியாக இருந்தவர்களின் நினைவில் அமைதி காண எத்தனித்துள்ளார்கள்.

துயிலும் உள்ளங்கள் எமது மக்களுக்குத் துயர் வர விடமாட்டா என்ற நம்பிக்கை எழுந்துள்ளது போன்று தோன்றுகின்றது. அச்சுறுத்தல்கள் ஆங்காங்கே இருந்திருப்பினும் அச்சமின்றி மக்கள் ஒன்று சேர்ந்தமை அரசாங்கத்திற்குத் தலையடி கொடுத்திருக்கிறது.

எமது இனம் விழித்துக்கொண்டிருக்கின்றது என்பதற்குத் துயிலும் இல்ல தொடர்பாடல்கள் கட்டியம் கூறி நிற்கின்றன. – என்றார்.

## 'அன்பமுதூறும் அயலார்' நாடக ஆற்றுகை

யாழ்ப்பாணம், நவ.29

நாடகஆர்வலர்களின் கூட்டிணைவில் செம்முகம் ஆற்றுகைக்குழுவின் தயாரிப்பில் ரஷ்யநாடகமான "Love of one's Neighbox" நாடகம் கலா நிதி குழந்தை ம.சண்முகலிங்கத்தின்மொழிப்பெயர்ப்பில்"அன்பமுதூறும் அயலார்" எனத் தமிழில் தயாரிக்கப்படுகிறது.

இந்நாடகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைமாலை 6 மணிக்கு, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் –

2 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சாவகச்சேரி கலாசார மண்டபத்திலும் அரங்கேற்றப்படும்.

நுழைவுக் கட்டணம் அன்பளிப் பாக 100 ரூபா பெறப்படும் என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.(இ)

## ஹெரோயினுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அண்மையில் வைத்து நேற்றுப் பிற்பகல் கைது செய்யப் பட்டுள்ளனர் என யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து தலா2 கிராம் எடையுடைய 60 ஹெரோயின் பைக்கெற்றுக்கள் கைப்பற்றப்பட்டன.

கந்தளாய் மற்றும் மாத்தளையைச்சேர்ந்த37மற்றும்28 வயதுடைய முஸ்லிம் நபர்களே இவ்வாறுகைதுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் சிறப்புக் குற்றத்தடுப்புப் பிரிவினரின் சுற்றுக்காவல் நடவடிக்கையின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் மேலும் கூறினர்.

## அரச...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி) கணிப்புப் போராட்டத்தில் குதித்துள்ளது. இதனால்மாணவர்கள், அலுவலர்கள், பொதுமக்கள் நேற்றுப்போக்குவரத்தில்நெருக்கடிகளை எதிர்கொண்டனர்.

தமது கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்கும்வரை இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இடம்பெறும் எனத் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி டிப்போ ஊழியர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டமையால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதனால்மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டனர்.

இ.போ.ச. வடபிராந்திய முகாமையாளரை இடமாற்றுமாறு கோரி கடந்த 18 ஆம் திகதி வவுனியாசாலைஊழியர்களால் பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும் உயர்அதிகாரிகள், அரசியல்வாதிகள் வழங்கிய வாக்குறுதியை அடுத்து அந்தப் பணிப்புறக் கணிப்பு கைவிடப்பட்டிருந்தது. வாக்குறுதிநிறைவேற்றப்படாமையால் வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் மீண்டும் பணிப்புறக் கணிப்புஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் யாழ். மத்திய பஸ் நிலையம் நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டது. அங்கு அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படாதிருக்க பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. பின்னர் தற்போது சிறப்பு அதிரடிப் படைப் பாதுகாப்பும் போடப்பட்டது.

போராட்டம் தொடர்பில் வடபிராந்திய ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் தலைவர் இராசரத்தினம் வாமதேவன் தெரிவிக்கையில் –

வட பிராந்திய முகாமையாளர் ஒரு தலைப்பட்சமாக குறிப்பிட்ட சிலரின் கதைகளைக் கேட்டுக் கொண்டு செயற்படுகிறார். பழிவாங்கும் செயற்பாட்டில் ஈடுபடுகிறார். வட மாகாணத்தில் தகுதியான பல உத்தியோகத்தர்கள் இருக்கின்றபோதும் தகுதியற்றவர்களுக்கு நியமனம் வழங்கப்படுகிறது. அவரது கட்சி சார்பானவர்களுக்கே முன்னுரிமை அளிக்கின்றார் – என்றார். (100)

## கைது...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி) யீட்டு நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்துள்ளார்.

தனக்கெதிரான – பொதுச் சொத்துக்களை மோசடி செய்த – வழக்கின் தீர்ப்பு இன்று புதன்கிழமை அறிவிக்கப்படவுள்ள நிலையில்கோட்டாபயராஜபக்ஷ இந்த மனுவை நேற்று முற்பகல் தாக்கல் செய்துள்ளார்.

தனது தந்தையான டீ.ஏ. ராஜபக்ஷவின் பெயரில் அருங்காட்சியகம் ஒன்றை அமைப்பதற்காக அரச நிதியிலிருந்து 9 கோடிரூபாவைப் பெற்று மோசடி செய்தார் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ மீது குற்றச்சாட்டு காணப்படுகிறது.

இது சம்பந்தமான வழக்கைப் பொலிஸ் நிதிமோசடி விசாரணைப்பிரிவுதாக்கல்செய்துள்ள நிலையில்,பொலிஸாருக்குஇந்த விசாரணைகளைமுன்னெடுக்க முடியுமா இல்லையா என்பது குறித்து முடிவெடுப் பதற்காக நேற்று மேன் முறையீட்டு நீதிமன்றம் கூடியது.

நேற்று மன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி, ரொமேஷ்டிசில்வா, மனுதாரரைக் கைது செய்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிராகத் தடையுத்தரவை பிறப்பிக்குமாறு மன்றில் கோரிக்கை விடுத்தார்.

எனினும்மேன்முறையீட்டுநீதியரசர்களான எல்.ரி.பீ. தெஹிதெனிய, ஷிரான் குணதிலக ஆகியோர் இது தொடர்பான தீர்மானத்தை இன்று அறிவிப்பதாகத் தெரிவித்தனர்.

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவு உள்ளிட்ட சிலர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அவரைக் கைது செய்தால் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில உட்படப் பலர் அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

கோட்டாபய கைது செய்யப்படுகின்றமையை ஜனாதிபதி மைத்திரிபாலவே தடுத்துள்ளார் என ஐ.தே.க. தரப்பில் இருந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் காப்பகங்கள் தொடர்பில் தேசிய கொள்கை!



கொழும்பு, நவ. 29

சிறுவர் காப்பகங்கள் தொடர்பான தேசிய கொள்கை ஒன்று வகுக்கப்படும் என்று மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சந்தி ராணி பண்டார தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தின் ஒன்பதாவது நாளான நேற்றுமுன்தினம் நாடாளு மன்றத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்-

சிறுவர் காப்பகங்களுக்கான வழிகாட்டல் நூல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. கர்ப் பிணித் தாய்மார்களுக்கு போஷாக்கு பொதியும் வழங்கப்படுகின்றது.

ஆயிரத்து 500 முன்பள்ளி பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 75 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

### தேர்தல் எல்லை நிர்ணயம் தொடர்பில்

## வவுனியாவில் மக்கள் கருத்தறிவும் நிகழ்வு; மாகாண சபை உறுப்பினர்களுக்கு அழைப்பு இல்லை

வவுனியா, நவ. 29

தேர்தல் எல்லை நிர் ணயம் தொடர்பான மக்கள் கருத்தறியும் நிகழ்வு நேற்றுமுன் தினம் வவுனியா மாவட்ட செயலகத் தில் இடம்பெற்ற போதிலும் தமக்கு அது தொடர்பில் அறி விக்கப்படவில்லை என மாகாண சபை உறுப்பினர்கள் தெரி வித்துள்ளனர்.

எல்லை நிர்ணயக் குழுவின்ஏற்பாட்டில் இடம்பெற்ற இக் கருத்தறியும் செயற் பாட்டில்கலந்துகொள் வதற்காக பொது அமைப்புக்கள் மற் றும் மக்கள் பிரதிநிதி களுக்கு பொதுவான முறையில் அறிவித் தல்வழங்கப்பட்டிருந் தது.

இருந்தபோதிலும் தகவல் கிடைக்கா மையினால் பொது மக்கள் அதிக எண் ணிக்கையில் கலந்து கொள்ளாத நிலையில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அவர்களது ஆதரவா ளர்கள் கலந்துகொண் டனர்.

இந்த நிலையில் மாகாணசபை உறுப் பினர்களுக்கும் உரிய முறையில் தகவல் வழங்கப்படவில்லை எனத்தெரிவிக்கும்வட மாகாணசபை உறுப் பினர் ஜி.ரி. லிங்கநா தன் மற்றும் ப. சத்திய லிங்கம் ஆகியோர் தமது ஆதங்கத்தை ஊடகங்களுக்குத்தெரி வித்துள்ளனர்.

இந்த மாகாண தேர் தல் தொகுதி எல்லை நிர்ணய கருத்தறியும் அமர்வில் அதன் அங்கத்தவர்கள் மற் றும் வவுனியா மாவட்ட தேர்தல்கள் ஆணையாளர், நில அளவையாளர் உட் படப் பலரும் கலந்து கொண்டமை குறிப் பிடத்தக்கது.



## கூட்டு எதிர்க்கட்சியினர் பிரேரணை கொண்டுவந்தால் மதுபானங்களின் விலைகளை அதிகரிக்க அரசு தயார்!

### சபையில் இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, நவ. 29

கூட்டு எதிர்க்கட்சியினர் பிரே ரணைகொண்டுவந்தால் அனைத்து மதுபான வகைகளின் விலை களையும் அரசு உடனடியாக அதி கரிக்கத் தயார் என்று நிதி இரா ஜாங்க அமைச்சர் இரான் விக்கிர மரத்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத்திட்டத்தின் குழு நிலை விவாதத்தின் ஒன்பதாம் நாள் விவாதம் நேற்றுமுன்தினம் நடை பெற்றது. இதன்போது நிதி இரா ஜாங்க அமைச்சர் இவ்வாறு குறிப் பிட்டார்.

இதுதொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பெண் தொழிலாளர்களுக்கு பொருத்தமான அலுவலக நேர கால அட்டவணையை நடை முறைப்படுத்துவதற்கு தொழிற் சங்கங்களுடன் பேச்சு நடத்தப் பட்டு வருகின்றது.

கர்ப்பிணித் தாய்மார்களுக் கான சத்துணவுப்பொதி சிறுவர் அபிவிருத்திக்காக பெருந்தொகை நிதியுதவி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் பெண் கள் தொடர்பான நூல்கள் வர லாறும் கிடையாது. அரசசேவை யில் பெரும் எண்ணிக்கையிலான பெண்கள் பணியாற்றுகின்றனர்.

தொழிலாளர்களில் பெண்க ளின் எண்ணிக்கை ஒரு சதவீத மாகும். கல்வித்துறையில் பெரும் பாலானோர் பெண்களாவர். ஆனால், தீர்மானங்களை மேற் கொள்ளும் சக்தி ஆண்கள் வசமே உண்டு.

மத்திய கிழக்கு நாடுகளில் வீட் டுப் பணிப்பெண்களாகப் பணி யாற்றுவோரின் எண்ணிக்கை தற்பொழுது குறைவடைந்துள் ளது. 40 சதவீதமாக இருந்த எண் ணிக்கை தற்போது 30 சதவீதமாக குறைவடைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பங்களாதேஷ் பாதுகாப்பு தினம் கொழும்பில்!

கொழும்பு, நவ.29

46 ஆவது பங்களாதேஷ் பாதுகாப்பு தின நிகழ்வு கொழும்பு கிங்ஸ்பறி ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் பாதுகாப்பு செயலாளர் கபில வைத்தியரத்ன, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க உள்ளிட்ட பங்களாதேஷ் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.




# சமுர்த்தித் திட்டத்தில் இருபது லட்சம் குடும்பங்கள் அடுத்த வருடத்திற்குள் இணைக்க நடவடிக்கை

### அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க நாடாளுமன்றில் தகவல்

கொழும்பு, நவ. 29

அடுத்த வருடத்திற்குள் 20 லட்சம் குடும்பங்களை சமுர்த்தித் திட்டத்தின் கீழ் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று சமூக வலுவூட் டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச் சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானம் பெறும் 14 லட்சம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்றும் வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவா தத்தின் ஒன்பதாவது நாளான நேற்றுமுன்தினம் அமைச்சர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள், சமூக வலுவூட்டல், சமூக நலன்புரி மற்றும் மலைநாட்டு மரபுரிமைகள் ஆகிய அமைச்சுக்கள் தொடர்பான நிதி ஒதுக்கீடு களுக்கு நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் அங்கீகாரம் கிடைத்தது.



இது தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க மேலும் குறிப்பிடு கையில்-

ஆசியாவில் வயோதிபர்களைக் கூடுதலாகக் கொண்ட இரண்டாவது நாடாக இலங்கை அமைந் துள்ளது. ஊனமுற்றவர்கள் 18 லட்சம் பேர் காணப் படுகின்றனர். இவர்களுக்காக சைகை மொழிப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

செவிப்புலன் ஆற்றல் குறைந்தவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள் ளார்.

# கோட்டாவை சிறை வைப்பதே புலம்பெயர் புலிகளின் திட்டம்

## அரசைச் சாடுகிறார் அபேதிஸ்ஸ தேரர்

கொழும்பு, நவ. 29

புலம்பெயர்ந்த புலிகளின் எதிர்பார்ப்பை நிறைவேற்றவே முன்னாள் பாதுகாப்புச்செயலாளர்கோட்டாபய ராஜபக்ஷவைக் கைது செய்ய அரசு முயற்சிக்கிறது.

– இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்பேராசிரியர்வண. மெத கொட அபேதிஸ்ஸ தேரர்.

'எதிர்காலத்துக்கானஒளி' என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே தேரர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போதைய ஜனாதிபதி மட்டுமல்லர், முன்னாள் ஜனாதிபதிமற்றும்பிரதமர், அமைச்சர்கள், அப்பாவி குழந்தைகள் உட்பட இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களது நெற்றி மீதும் துப்பாக்கி வைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில்நாட்டைக் காப்பாற்றும் கடமையில் ஈடுபட்டவர்தான் கோட்டாபய ராஜபக்ஷ.

அவரது அந்த நடவடிக்கையானது தமிழீழ விடுதலைப்புலிகள்,புலம்பெயர் சமூகம், புலிகளைப் பலமடையச் செய்த சர்வதேச அமைப்புக்கள் ஆகியவற்றுக்குப் பேரடியாக அமைந்தது. அதனால் கோட்டாபய ராஜபக்ஷவை ஒரு நாளைக்காவது கைது செய்து, சிறை வைப்பதானது அவர்களது கனவும், எதிர்பார்ப்புமாகும்.

யாழ். பல்கலைக்கழகத்தை மையப்படுத்தி அங்கு விடுதலைப் புலிகளை நினைவு கூர்ந்துள்ளனர். அவர்கள் உயிரிழந்தவர்களை நினைவு கூர்கிறார்கள் எனக்கூறினாலும் அதனை மே 18 ஆம் திகதியே செய்ய வேண்டும். எனினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரது பிறந்தநாளை அவர்கள் இலங்கை அரசின் அனுசரணையுடன் கொண்டாடுகிறார்கள். – என்றார்.




## கல்வயலில் 3 வீடுகளில் ஒரே இரவில் கொள்ளை

சாவகச்சேரி – கல்வயல் சண்முகானந்தா வீதியில் ஒரே இரவில் மூன்று வீடுகளில் கொள்ளையர்கள் கைவரிசையை காட்டியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று வீடுகளிலும் முன் கதவுகளைக் கூரிய ஆயுதம் ஒன்றால் திறந்து உள்ளே புகுந்த கொள்ளையர்கள், அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி நகைகளைக் கொள்ளையடித்து சென்றனர். இந்தச் சம்பவங்கள் நேற்று அதிகாலையில் இடம்பெற்றுள்ளன.

கல்வயல்–புலுட்டையன் பிள்ளையார் கோவில் கணக்காளரின் வீட்டில் 16 பவுண் நகைகளும் மற்றைய இரு வீடுகளிலும் சேர்த்து மொத்தமாக 20 பவுண் நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்களால் கல்வயல் பகுதியில் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாடுகளையடுத்து மோப்ப நாயின் உதவியுடன் மூன்று வீடுகளிலும் பொலிஸார் சோதனைகள் நடத்தினர்.

தென்கொரியாவுக்கு அரசமுறைப் பயணமாகச் சென்றிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அந்நாட்டு அதிபர் மூன் ஜெயினுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு இன்று இடம்பெறுகின்றது. நேற்று சியோல் நகரில் உள்ள புராதன பௌத்த விகாரைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சென்றசமயம் அந்நாட்டு அதிபர் மூன் ஜெயின் அங்கு வருகை தந்து இலங்கை ஜனாதிபதியை வரவேற்றார். (உ)







## சு.கவில் மஹிந்த சேர்ந்தால் ஆதரவளிக்காது மகாசங்கம்

### ஆனந்த தேரர் நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 29

அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் மஹிந்த ராஜபக்ஷ இணைவாராயின், அவருக்கு மகா சங்கத்தினரின் ஆதரவு கிடைக்காது என தாய் நாட்டைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் வண.முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது அமைப்பு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுடன் உள்ளது. எனவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்களுடன் கலந்துரையாட மஹிந்த திட்டமிட்டுள்ளமையை உடனடியாக நிறுத்த வேண்டும்.

அமைச்சுப்பதவிகளைப் பெற்றுக்கொள்ளும் ஆசையில் சில உறுப்பினர்கள் கூட்டு எதிரணியில் உள்ளனர். இவர்களே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைவதற்கு எதிர்பார்த்துள்ளனர். எனவே மஹிந்த ராஜபக்ஷ இவர்களின் அபிப்பிராயங்களுக்கு செவிமடுக்காமல் மகாசங்கத்தினரை நம்புகிறார் – என்றார்.

## அமெரிக்காவில் கத்திக்குத்து; இலங்கைப் பெண் கொலை

அமெரிக்காவில் இலங்கையைச்சேர்ந்த பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நியூயோர்க் ஸ்டாட்டன் தீவுப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இந்த அனர்த்தம் ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

63 வயதான பெண் ஒருவர் கொலை செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டார் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அவரது முகம் மற்றும் உடலில் ஏறத்தாள 15 கத்திக் குத்துக் காயங்கள் காணப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவரைக் காப்பாற்ற முயற்சித்த மார்க் என்ற 56 வயதுடைய நபர் ஒருவரும் படுகாயமடைந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஸ்டாட்டன் தீவுப் பகுதியைச் சேர்ந்த கீதா எனப்படும் இலங்கைப் பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பெண் ஒருவர் மீது கொடூரமான கத்திக் குத்துத்தாக்குதல் மேற்கொள்ளப்படுவதை அவதானித்த அயல் வீட்டு நபர் உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருவதை அவதானித்த சந்தேக நபர் மேலும் தீவிரமாக அவரைக் குத்திவிட்டுத் தப்பிச் செல்ல முயன்றுள்ளார்.

இதன்போது உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார் 27 வயதான சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

கீதா வங்கிக்குச் சென்று வந்த சில மணி நேரங்களிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், கொள்ளைச் சம்பவம் ஒன்று கொலை சம்பவமாக மாறியுள்ளதெனவும் கீதாவின் உறவினர்கள் தெரிவித்தனர்.

சில மணி நேரங்களில் இலங்கை உறவினர்க ளின் திருமணத்திற்கு செல்ல கீதா உட்பட குடும்பத்தினர் ஆயத்தமாகியிருந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக உறவினர்கள் மேலும் குறிப்பிட்டனர்.


## மரண அறிவித்தல்



### தங்கராசா ரம்மியன்

வதிரியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிமாகவும் கொண்ட தங்கராசா ரம்மியன் கடந்த (22.11.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தங்கராசா – (அமரர்) லோகசக்தி தம்பதிகளின் அன்பு நிறைந்த மகனும், மனோகரன் ஜெயகுமாரி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், பிரவீணாவின் அன்பு நிறைந்த கணவரும், வாணி (ஜேர்மனி), சுரேந்திரா (பிரான்ஸ்) , சுகிர்தா, காயத்திரி (லண்டன்), உஷாநத் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவாகரன் (ஜேர்மனி), ஜெயசீலன் (லண்டன்), யாசோதா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், அஜந்தன் (NCG Express), கஷாகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகலனும், லாவண்யா, லோஜினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், கம்சவர்த்தினி (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), சாகித்யா (யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), கஜிஷா (சுவிஸ்), கஜீஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு நிறைந்த சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2017) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் Impasse Du. Rondeau, 91080 Couronnes every France எனும் இடத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைகள் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

இல.186/ 26,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
0776621255

தகவல்: கி.மனோகரன் (மாமனார்)
தலைவர் – யாழ். மாவட்டக் கரபந்தாட்ட சங்கம்,
தலைவர் – முன்னாள் பணியாளர் சங்கம், சீமெந்து தொழிற்சாலை.
தலைவர் – காங்கேசன்துறை மீள்குடியேற்ற சங்கம்,
தலைவர் – சர்வதேச நடேஸ்வரன் நம்பிக்கை நிதியம்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.11.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.